பக்கங்கள் 8

# ஈழநாடு
The Eelanaadu

60 சதம்

மலர் 22 | மார்கழி 8 | ஸபர் 14 | இதழ் 314
யாழ்ப்பாணம் | செவ்வாய்க்கிழமை | 23 - 12 - 80

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS
RECEIVED
-12-23
PERIODICALS DIVISION
LIBRARY

நியூ கேம்பிறிட்ஜ்
திருநெல்வேலிச் சந்தி
புதிய வகுப்பு ஆரம்பம்
23-12-80
G. C. E. A/L 81
April, August.
விலங்கியல்-
ஜெகானந்தகுரு
பௌதிக இரசாயனம்-
சேதன இரசாயனம்-
அன்ரன் மாஸ்ரர்
இரண்டு பகுதிகளும்
தனித்தனி வகுப்புகளாக
நடைபெறும்.

## வை.பி. சவான் கைது!

புதுடில்லி, டிச 22.

இந்திய முன்னாள் வெளிநாட்டமைச்சர் திரு. வை. பி. சவான் நேற்று கைது செய்யப்பட்டார்.

இதுகுறித்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இன்று பாராளுமன்றத்தில் பலத்த கண்டனம் தெரிவித்தனர்.

திரு சவான் மகாராஷ்டிரத்தில் விவசாயிகள் ஆர்ப்பாட்ட ஊர்வலத்துக்குத் தலைமை வகித்துச்சென்றபோதே கைதுசெய்யப்பட்டார். இன்று இவர் விடுதலை செய்யப்பட்டார்.

### சபாநாயகர் மீதான அவநம்பிக்கைப் பிரேரணை

# எதிர்க்கட்சியினர் வராவிடின்!

# அரச தரப்பினரே பிரேரிப்பர்

## அமைச்சரவை முடிவு

(கொழும்பு)

கலவான எம்.பி. விவகாரம் தொடர்பான தீர்ப்பை அடுத்து சபாநாயகருக்கு எதிராக எதிர்க்கட்சியினர் ஏற்கனவே சமர்ப்பித்திருந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்க்கட்சியினர் இன்று பாராளுமன்றத்தில் பிரேரிக்காவிடினும் அரசாங்க கட்சியினர் அதனைப் பிரேரித்து விவாதித்து முடிவெடுப்பார்கள்,

இவ்வாறு அமைச்சரவை தீர்மானித்துள்ளதாகராஜாங்க அமைச்சர் திரு. ஆனந்த திஸ்ஸ ட அல்விஸ் நேற்றுத் தெரிவித்தார்.

அமைச்சரவையின் வாராந்தக்கூட்டத்தில் இவ்விவகாரம் குறித்து ஆராயப்பட்டபோதே இம்முடிவு எடுக்கப்பட்டதாகவும் அரசாங்கப் பேச்சாளருமான திரு. அல்விஸ் கூறினார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணையை இன்று விவாதித்து முடிவு எடுக்க சபையின் நிரந்தர விதிகள் இடைநிறுத்தம் செய்யப்படும் என்றும்— எதிர்க்கட்சியினர் அப்பிரேரணையை பிரேரிக்காவிட்டாலும், அரசாங்க தரப்பினர் சபையின் நிரந்தர விதிகளின் கீழ் பிரேரித்து விவாதித்து

(8-ம் பக்கம் பார்க்க)

### துண்டுப்பிரசுர வழக்கு:

## காசி, மாவை உட்பட 8 இளைஞர்களும்விடுதலை

(கொழும்பு)

துண்டுப்பிரசுர விநியோக வழக்கில் காசி ஆனந்தன், சேனுதிராசா உட்பட எட்டு இளைஞர்களும் நேற்றுவிடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கு கொழும்பு பிரதம நீதிபதி திரு. எல்லபொல முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் மட்டக்களப்பில் அரசுக்கு எதிராக துண்டுப்பிரசுரம் விநியோகித்ததாக காசி ஆனந்தன், மாவை சேனுதிராசா, வேணு

(8-ம் பக்கம் பார்க்க)

### யாழ். மாவட்ட அபிவிருத்தி:

## $2\frac{3}{4}$ கோடி ரூபாவும் செலவு; மேலும்25லட்சம் தேவையாம்

(யாழ்ப்பாணம்)

அரசாங்கம் யாழ் மாவட்ட அமைச்சுக்கு இவ்வாண்டு ஒதுக்கிய இரண்டு கோடியே எழுபத்தைந்து லட்ச ரூபாவும் செலவிடப்பட்டுள்ளது. இவ்வாண்டில் ஆரம்பிக்கப்பட்டுப் பூர்த்தியாகாத சில வேலைகளை முடிப்பதற்கு மேலும் இருபத்தைந்துலட்ச ரூபா தேவைப்படுகிறது. இதனை மேலதிகமாகக் கொடுத்துதவ வேண்டுமென நாம் திறைசேரியைக் கோரியுள்ளோம்.

இவ்வாறு யாழ். மாவட்ட திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திரு. எஸ். சிவதாசன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:—

''யாழ். மாவட்டத்தில் இவ்வாண்டு பல அபிவிருத்தி வேலைகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளன. பல பள்ளிக்கூடங்களில் புதிதாகக் கட்டிடங்கள் நிர்மாணம் செய்யப்பட்டுள்ளன. பால் சேகரிப்பு நிலையம், கோழித்தீன் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை, கீரிமலைக் கடற்கரை அபிவிருத்தி, நுண்கலை நெசவுநிலையம் என்பன குறிப்பிடத்தக்க அபிவிருத்தியாக நோக்கமுடியும்.

### கீரிமலைக்கேணி புனர்நிர்மாணம்

நீண்டகாலமாக அபிவிருத்தியின்றிக் காணப்பட்ட கீரிமலைக் கேணி தற்போது ஒருலட்ச ரூபா செலவில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு வருகின்றது.

இரண்டாவது கட்டமாக, கீரிமலையில் உல்லாசவிடுதி அமைப்பதற்கும், கடற்கரையிலுள்ள முருகைக்கற்களை அகழ்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது. இவை அடுத்த ஆண்டு நடைமுறைப் படுத்தப்படும்.

யாழ் நகரில் சகலவிதமானதையும் றைக்கோடிங் செய்வதற்கு முன்னணி ஸ்தாபனம்.
மற்றும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ரேப் றைக்கோடர்கள், றேடியோக்கள், றைஸ் குக்கர் யாவற்றுக்கும் நத்தார் பண்டிகையை முன்னிட்டு விசேட கழிவு உண்டு.
விநாயகர் றேடிங் கம்பனி அன்ட் றைகோடிங் சென்ரர்
6A, நவீனசந்தை, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7403
7717

## கூட்டணி - அதிருப்தியாளர் 28-ல் சந்திப்பு

கொழும்பு]

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும், கூட்டணி அதிருப்தியாளர்களுக்குமிடையே இம்மாதம் இருபத்தெட்டாம் திகதி பேச்சு வார்த்தைகள் நடைபெறும்.

இம்மாதம் 14ம் திகதி யாழ் நகரில் நடைபெற்ற கூட்டணி அதிருப்தியாளர்கள்கூட்டத்தில், சில முக்கிய பிரச்னைகள் குறித்து கூட்டணியைச் சந்திப்பதென்றும் இதற்காக ஏழுபேர்கொண்ட குழு ஒன்று நியமிப்பதென்றும் முடிவுசெய்யப்பட்டிருந்தது. கடந்த சனிக்கிழமை நடைபெற்ற கூட்டணி செயற்குழுக்கூட்டத்தில், அதிருப்தியாளர்களை இம்மாதம் 28ல் சந்திப்பதென்றுதீர்மானிக்கப்பட்டது.

இச் சந்திப்பு, யாழ் நகரில்,

(8-ம் பக்கம் பார்க்க)

முதலாவது ஆண்டு நிறைவு விழாவில்--
எமது அன்பான வாடிக்கையாளர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும்
இனிய வாழ்த்துக்கள்!
ஆண்டு பூராகவும் சுவைத்து மகிழ்ந்திடும் ✶ இனிய ஐஸ்கிறீம் வகைகளுக்கும் ✶ இனிய சிற்றுண்டி ✶ தேநீர் ✶ ஒவல் ✶ மைலோ ✶ நெஸ்கபே பானத்துக்கும் பெயர் பெற்றவர்கள்
கல்யாணி கிறீம் ஹவுஸ்
73, கஸ்தூரியார் வீதி, (போன்: 8077) யாழ்ப்பாணம்.
———மீண்டும் மீண்டும் உங்கள் வரவை எதிர்பார்க்கின்றோம்-----

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

இறைச்சிக் கோழிகள் சில்லறையாகவும் தொகையாகவும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். அண்ணா விவசாயப்பண்ணை, புகையிரதவீதி, இணுவில். அண்ணா விற்பனை நிலையம், பசார்லேன், யாழ்ப்பாணம். 7720

நல்லூரில் ஒன்றேகால் பரப்புக் காணி உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: இ. பாலசுப்பிரமணியம், சட்டத்தரணி, 52, வைமன் ரோட், யாழ்ப்பாணம். 7719

கட்டுடைச் சந்திக்கருகாமையில் வீடு கட்டுவதற்கு ஏற்ற, சுற்றுமதில், கிணற்றுடன் கூடிய ஏழு பரப்புக்காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு:- க. மெய்ஞ்ஞானமூர்த்தி, கட்டுடை, மானிப்பாய். 7715

No 2800 நாஷனல் பனசொனிக் டெக். புதிய மொடல்-கெசற், கொடக் இன்ஸ்ரான்ற் கமெரா. 4, மணிக்கூட்டு ஒழுங்கை, யாழ்ப்பாணம். 7714

யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் சகல வசதியுடன் வீடு வளவு விற்பனைக்கும், பெண்களுக்கு மட்டும் சாப்பாட்டுடனும் தனித்தும் அறைகள் வாடகைக்கும் கொடுக்கப்படும். தொடர்பு கொள்ளவும். சி. கனகரெத்தினம், 465/1 கே. கே. எஸ் ரோட், யாழ்ப்பாணம். 7666

### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## கேள்வி அறிவித்தல்

பின்வரும் அமைப்பு வேலைகளுக்கு 08-01-81-ம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. வன்னியசிங்கம் [illegible] பகம்.
2. ஸ்ரேஷன் வீதி வடிகால்
3. கோவில் வீதி அணைச் சுவர்.

கேள்விப்பத்திரங்கள் மாநகராட்சி மன்றத்துடனோ அல்லது வேறு அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனங்களுடனோ ரூபா 50 000/-க்கு மேல் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்படும்.

ஒவ்வொரு கேள்விக்கும் வைப்புப் பணமாக ரூ 100/-ம், மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணமாக ரூ. 25/-ம் செலுத்தியதின் பேரில் 05-01-81-ம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12-00 மணிவரை மாநகராட்சிமன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்கள் மீது கேள்விகள் இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல்வேண்டும். மேலதிக விபரங்களை மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து அறிந்துகொள்ளலாம்.

க. சிவஞானம்,
மாநகராட்சி மன்ற
ஆணையாளர்,

வேலைப்பகுதி,
மாநகராட்சிமன்றம்,
யாழ்ப்பாணம்.
22-12-80 77

# "யாழ். நகர மின்சாரவேலைகள் விரைவில் நிறைவேற்றப்படும்"

### மாநகரமுதல்வர் உறுதி

(அரியாலை)

"அரசாங்கத்தின் மின்சார சபை யாழ் நகருக்கு மின்சாரம் வழங்கும் பொறுப்பைக் கையேற்றாலும், நகர எல்லைக்குள் செய்யப்பட வேண்டிய அத்தியாவசிய மின்சார வேலைகளை அவர்களின் கவனத்துக்குச் சமர்ப்பித்து நிறைவேற்றி வைக்கப்படும். மாநகரசபை தற்பொழுது 66 இடங்களின் மின்சார வேலைகளை ஆரம்பித்துள்ளது. இவற்றில் சில பகுதி வேலைகள் முடிவடைந்து வருகின்றன மிகுதி வேலைகளை முடிக்கத் தீவிரமாகச் செயல்பட்டு வருகிறோம்."

இவ்வாறு யாழ்ப்பாண மாநகர முதல்வர் திரு இராசவிசுவநாதன் அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலைய இளைஞர் கலமன்றத்தின் ஆதரவில் நடைபெற்ற பௌர்ணமி விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

இளைஞர் கலாமன்றத் தலைவர் செல்வன் இ. கருணாகரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு ஏ. வீரசிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினர்.

யாழ். மாநகர முதல்வர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"யாழ். மாநகரத்தில் இருக்கும் 23 வட்டாரங்களில் நான் முதல்வராகப் பதவியேற்ற ஒன்றரை வருடகாலத்துக்குள் அதிகமான வேலைகள் இவ்வட்டாரத்தில் தான் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வீதிகள் செப்பனிடவும், மின்சார வேலைகளுக்கும் பெருந்தொகையான பணம் செலவிடப்பட்டுள்ளது இவ்வட்டார உறுப்பினரின் அயராத முயற்சியினால் இவ்வேலைகளைச் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது. சட்டத்திற்கு விரோதமாக சிலர் மின்சாரம் பாவித்து வருகின்றனர். இதனால் மாநகர சபைக்கு பெருநட்டம் ஏற்பட்டு வருகிறது. இதனைத் தவிர்க்க இப்படியானவர்களைக் கண்டுபிடித்துத் தண்டிக்க இது போன்ற மன்றங்கள் மாநகர சபைக்கு உதவ முன்வரவேண்டும். மாநகர எல்லைக்குள் தற்பொழுது பாவிக்கப்படும் வாளி மலசலகூடங்களை நீரடைப்பு மலகூடங்களாக மாற்றியமைக்க மாநகராட்சி மன்ற சுகாதாரப் பிரிவு இலவசமாக சீமெந்தும், கோப்பையும் வழங்கிவருகிறது. இப்பகுதியில் வாளி மலகூடத்தைப் பாவனையில் வைத்திருப்போர் இவ்வுதவியைப் பெற்று நீரடைப்பு மலகூடமாக்க முன்வரவேண்டும். வீதிகளையும் நகரத்தையும் சுத்தமாக வைத்திருக்க மாநகராட்சி மன்றம் பெருந்தொகையானபணத்தை வருடாவருடம் செலவிட்டு வருகிறது. நகரத்தைச் சுத்தமாக வைத்திருக்கும் பணியில் மாநகராட்சி மன்றத்திற்கு உதவ ஒவ்வொரு குடியிருப்பாளரும் முன்வரவேண்டும். கலைமகள் வட்டாரத்தில் தற்பொழுது செயல்பட்டு வரும் பிரசவ விடுதிக்கு இப்பகுதியில் நல்ல வீடொன்று வாடகைக்குக்கிடைக்குமானால் அவ்வீட்டில் இதனைத் தொடர்ந்து செயல்பட நடவடிக்கை எடுக்கப்படும். எதிர்வரும் இருபத்தாறும் திகதி நடைபெறவிருக்கும் மாநகராட்சி மன்றத்தின் வரவுசெலவுத் திட்ட விவாதத்தின் பின்னர் இவ்வட்டாரத்திற்கு அவசியமாக மேற்கொள்ளப்படவேண்டிய வேலைகளில் கவனஞ் செலுத்தப்படும்

கலைவிழாவில் பாட்டுக்குப் பாட்டு, கேள்வி பதில், சிறுவர் கதம்ப நிகழ்ச்சிகள் என்பன இடம் பெற்றும். (ஈ)

### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## கூறுவிலை அறிவித்தல்

நகரமண்டப சுவருக்கு சீலிங் பலகை அடித்தல், பலகை அடித்தல் வேலைகளுக்கான கூறுவிலை யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் 29-12-80ம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்,

1. இருக்கும் சீலிங் மரங்களில் பிறிதாக இதற்கென இணக்கப்பட்ட சீலிங்பலகை துளைபோட்டு கம்பி ஆணியால்தைத்துவிடுவதற்கு ஒரு சதுரத்திற்கு
2. சுவரில் நீப்பைதைத்துப் பின் பிறிதாக இதற்கென இணக்கப்பட்ட பலகை துளைபோட்டுக் கம்பி ஆணியால் தைத்துவிடுவதற்கு ஒரு சதுரத்திற்கு.

கூறுவிலை அடக்கப்பட்ட கடிதஉறை அரக்கு முத்திரையிடப்பட்டு, உறையின் இடதுபக்க மேல்மூலையில் "சீலிங் பலகை, பலகை அடித்தல் கூறுவிலை" எனக்குறிப்பிடப்பட்டு, ஆணையாளர், மாநகராட்சி மன்றம், யாழ்ப்பாணம் என விலாசமிடப்பட்டு பதிவுத்தபாலிலோ அல்லது இதற்கென வைக்கப்பட்டுள்ள கூறுவிலைப்பெட்டியில் சேர்க்கப்படல்வேண்டும். மேலதிக விபரங்களை மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து அறிந்துகொள்ளலாம்.

க. சிவஞானம்,
மாநகராட்சி மன்ற
ஆணையாளர்

வேலைப்பகுதி,
மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்.
22-12-80 7721

## அருந்தொண்டாற் குருவானர்

நாரந்தனை பெற்றெடுத்த புதல்வன் ஜெரோம் தமது 62 வது வயதில குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். பெறற்கரிய பேறும் குருபதவியைப் பெற்றுள்ள இத்துறவி 1937 ம் ஆண்டு முதல் 40 ஆண்டுகளாக சஞ்சுசையப்பர் துறவிகள் சபையில் ஒரு சந்நியாசியாக இறைபணி ஆற்றிவந்தார். பி. ஏ. பட்டதாரியான இவர், ஆசிரியராகவும், பின் அதிபராகவும், புனித சூசையப்பர் துறவறசபையினரால் நிருவகிக்கப்பட்ட பாடசாலைகளில் பணியாற்றினர். அதிபராயிருந்து இளைப்பாறியபின் 1977 ம் ஆண்டு பிலிப்பைன்ஸ் தேசத்தில் மணிலா நாட்டில நடைபெற்ற சர்வதேச துறவிகள் மாநாட்டில் பங்குபற்றிய பின் நாடு திரும்பியதும் குருவாகவேண்டுமென ஆவல் கொண்டார். சலேஷியன் சபையில் சேர்ந்து கண்டி தேசிய குருமடத்தில் குருபதவிக்கான கல்வி பயின்றர்.

கண்டி ஆயர், நீர்கொழும்பு புனித செபஸ்தியார் ஆலயத்தில் இவருக்கு குருத்துவ அபிஷேகஞ் செய்து குருவாகத் திருநிலைப்படுத்தினர். இம்மாதம் 29 ம் திகதி புதிய குரவர் தமது பிறந்தகமான நாரந்தனையில் திருப்பலி நிறைவேற்றுவார் நாரந்தனையில் யுவக்கம் அல்லது தம்பையா தம்பதிகளுக்கு இரண்டாவது புதல்வனாக இவர் 1918 ம் ஆண்டு பிறந்தார்

அருந்துறவியான ஜெரோம் அடிகள் இறைவனுக்கு இன்னும் அருந்தொண்டாற்றவென்றே, குருவாக எண்ணங் கொண்டார்

—எஸ். எம். ஜே.

## வீதி புனரமைப்பு

(உடுப்பிட்டி)

நெல்லியடிப் பட்டினசபை [illegible] உள்ள [illegible] வீதி 15,000 ரூபா செலவில் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. (கு)

### "மன்னர் வைத்திய சாலையில்

# பிரேத அறைசீர்கேடு; நாம் சரித்திரத்தை ஆராய்கிறோம்"

— சூசைதாசன்

(மன்னர்)

"மன்னர் அரசினர் ஆதார வைத்தியசாலையிலுள்ள பிரேத அறை சீர்கேடடைந்துள்ளது. புதிய பிரேத அறை ஒன்றை அமைக்கவென கடந்த மே மாதம் பதில் சுகாதார அமைச்சரினல் நாட்டப்பட்ட அடிக்கல் அப்படியே இருக்கிறது. பிரேதஅறை அமைப்பதற்கான எந்தவித நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளவில்லை. இந்த நிலையில் நாம் இப்போது வைத்தியசாலையின் சரித்திரத்தை ஆராய்ந்து கொண்டிருக்கிறோம்."

இவ்வாறு மன்னர் அரசினர் ஆதார வைத்தியசாலையில் மக்கள் கனவிழாவின் போது மன்னர் எம்.பி. திரு. பி எஸ் சூசைதாசன் கூறினர். இவ்விழாவில் பிரதம விருந்தினராக சுகாதார அமைச்சர் திரு காமினி ஜெயசூரிய கலந்து கொண்டார்

மன்னர் எம் பி திரு பி எஸ். சூசைதாசன் தொடர்ந்து தமதுரையில் வைத்தியசாலையின் சரித்திரத்தை இப்போதுள்ள குழந்தைகளிடம் கேட்டாலும் சொல்லுவார்கள் முன்பு மன்னர் அரசினர் ஆதாரவைத்திய வைத்தியசாலை கழுதைகள் நிறைந்த கூடாக இருந்தது. இங்கு நோயாளிகள் தங்கிச் சிகிச்சை பெறப் பயப்பட்டனர் இப்போது அந்தநிலை மாறிவிட்டது.

"பிரேதஅறையைப்பார்வையிட்ட அமைச்சர் இந்தபிரேத அறையை புதிதாக அமைக்க எவ்வளவு பணம்தேவைஎன்று கேட்டார். 95 ஆயிரம் ரூபா தேவையென்று நான் சொன்னேன் இந்தப்பணத்தை எந்தவழியிலாவது சேகரித்து நிதி ஒதுக்கீடு செய்வேன்என்று சொல்லியுள்ளார்" என்றர் (கு)

# 70-வயது 'குழந்தை' கிணற்றுக்குப் பலி!

(உடுப்பிட்டி)

பக்கத்து வீட்டுக்குச் சென்றவர் அங்குள்ள கிணற்றுக்குப் பலியான சம்பவமொன்று கரணவாய் வடக்கில்நடந்துள்ளது.

[illegible] பெண் குழந்தை என்னும் 70 வயதுடைய [illegible] மாதே கிணற்றுக்குப் பலியானவராவார்.

இவரது மரணம் சம்பந்தமான விசாரணைகளை வடமராட்சிப் பகுதி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. கி. வேலுப்பிள்ளை மேற்கொண்டார்.

நீரில் மூழ்கி மூச்சுத்திணறியதால் ஏற்பட்ட மரணமென தீர்ப்பளித்தார். (கு)

# சோடா மோசடி: 5000 ரூபா அபராதம்!

(யாழ்ப்பாணம்)

குளிர்பானமோசடியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் ஒருவருக்கு 5 ஆயிரம்ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

ஆனைக்கோட்டை [illegible] புலத்தைச் சேர்ந்த தியோகுப்பிள்ளை மரியதாஸ் என [illegible] மேற்படி நபராவார்.

கடந்த பலவருடங்களாக யாழ்ப்பாணத்தில் யானைச் சோடாப் போத்தல்களை மோசடி நடைபெறுவதை யானைச்சோடாக் கம்பனியின் தலைமைக் காரியாலய உயர் அதிகாரி திரு எவ் என். டி அல்விஸ் கண்டுபிடித்து யாழ். பொலிஸ் நிலையத்தில் புகார் செய்ததையடுத்து புலன்விசாரணையில் ஈடுபட்ட உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. விக்கிரமசிங்க, கான்ஸ்டபிள்கள் திரு. என் நடராசா, திரு. அ. வே தேவசகாயம், திரு. இராசரத்தின, திருநாவுக்கரசு வான் பத்திரான. திரு. தயானந்த ஆகியோர் ஆனைக்கோட்டை உயரப்புலத்திலுள்ள வீடொன்றைச் சோதனையிட்டபோது அங்குபாவிச் சோடாக்கள் அடைக்கப்பட்ட 100 யானைமார்க் சோடாப் போத்தல்களும், 35 வெற்று யானைச் சோடாப் போத்தல்களும் சோடாக் கலக்கும் ரசாயனபதார்த்தங்களும், சோடாஅடைக்கும் இயந்திரம் ஒன்றும் இருக்கக் கண்டுபிடித்தனர்

மேற்படி பொருட்களைக் கைப்பற்றிய பொலிசார் சந்தேகத்தின் பேரில் வீட்டின் சொந்தக்காரரான தியோகுப்பிள்ளை மரியதாஸ் அல்லது மரியதாசன் என்பவரைக் கைது செய்தனர்.

யாழ். விசேட குற்றத்தடுப்புப் பகுதிப் பொறுப்பதிகாரி திரு பிள்ளை சந்தேகநபரை யாழ் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது சந்தேகநபர் குற்றத்தை ஏற்றுக் கொண்டதை அடுத்து நீதவான் திரு. ரி, ஜோகநாதன் சந்தேகநபருக்கு 5 ஆயிரம்ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

(கொ-கு)

# திருவள்ளுவர் மகாசபை தீர்மானம்

(அரியாலை)

தமிழ் மக்களின் தலைவராகவும், முன்னணி அரசியல் வாதியாகவும், சிறந்த சட்டவல்லுனராகவும் பொதுவாழ்வில் ஈடுபட்டிருந்த காலஞ்சென்ற அமரர் ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் பெயரில் தெல்லிப்பளை மருத்துவ மனையில் புற்றுநோய்ச் சிகிச்சைப் பிரிவொன்றை அமைக்க 8 லட்சம் ரூபாவை நன்கொடையாக வழங்கியமைக்கு அவரது குடும்பத்தினருக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றை திருவள்ளுவர் மகாசபை நிறைவேற்றியுள்ளது

அகில இலங்கைத் திருவள்ளுவர் மகாசபையின் பொது நிர்வாக சபைக்கூட்டம் மீசாலையில் மகாசபைத் தலைவர் திரு. க கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், சமத்துவ வழிபாட்டுக்கு இதுவரை திறந்துவிடப்படாமல் இருக்கும் சகல ஆலயங்களையும் திருவெம்பாவை காலத்தில்திறந்து விட நடவடிக்கை எடுக்கும்படி சம்பந்தப்பட்டவர்களுக்கு பிரதேச அபிவிருத்தி அமைச்சின் இந்து மத அலுவல்கள் திணைக்களத்தின் சார்பில சுற்றறிக்கையை அனுப்பியமைக்கு பிரதேச அபிவிருத்தி அமைச்சருக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. (ஈ)

# சார்ஜன்ட் அன்ரன் கொலை வழக்கு

(யாழ்ப்பாணம்)

பொலிஸ்சார்ஜன்ட் அன்ரன் கொலை வழக்கு நேற்று யாழ். நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு இம்மாதம் 29 ம் திகதிக்கு ஒத்திப் போடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணயக்கைதிகள் விவகாரம் ஈரானின் நிபந்தனைகள் நியாயமற்றவை

# கார்ட்டரின் அதிகாரவரம்புக்கு

### அப்பாற்பட்டவை என்றும் கூறுகிறது அமெரிக்கா

வஷிங்டன், டிச. 22 அமெரிக்க பயணக் கைதிகள் விவகாரம் குறித்து ஈரான் விதித்துள்ள இறுதி நிபந்தனைகள் நியாயமற்றவை என்றும் இதை நிறைவேற்றுவது அதிபர் கார்ட்டர் நிர்வாகத்தின் அதிகார வரம்புக்கு அப்பாற்பட்டது என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

பணயக் கைதிகளை நத்தாருக்குமுன் விடுதலை செய்வதற்கான சாத்தியக் கூறுகள் எதுவும் இல்லை என்றும் அமெரிக்க உயர்அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

**நிபந்தனை**

பணமாகவும், தங்கமாகவும் 2400 கோடி டாலரை அமெரிக்கா அல்ஜீரிய வங்கியில் வைப்புச் செய்தால் மட்டுமே பணயக் கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள் என்று ஈரான் கடந்த வாரம் தெரிவித்திருந்தது தெரிந்ததே. (இ)

## மறியல் ஒத்திவைப்பு

சென்னை, டிச 22 தமிழ்நாட்டில் இம்மாதம் 27ம் திகதி நடத்த இருந்த விருந்த விவசாயிகள் 'மறியல்' ஒத்திவைக்கப்பட்டு 31ம் திகதி நடத்தப்படும் என்று தமிழ் நாடு விவசாயிகள் சங்கத் தலைவர் திரு நாராயணசுவாமி தெரிவித்தார். (இ)

## "சோதிடக் கலைக்கு புத்துயிர்"

(யாழ்ப்பாணம்)

"சோதிடக் கலைக்கு புத்துயிர் அளிப்பதற்காகவே சோதிட ஆய்வுமன்றத்தை ஆரம்பித்துள்ளோம். இவ் ஆய்வு மன்றத்தினால், ஆராயப்பட்ட முதலாவது கட்டுரையே நாலுருவில் வெளியிடப்பட்டுள்ளது"

இவ்வாறு பண்டிட் டாக்டர் கே என் நவரத்தினத்தினால் எழுதப்பட்ட "எண்களின் மறுமலர்ச்சி" என்ற நூலை வெளியிட்டுவைத்து உரையாற்றிய இலங்கை கலை இலக்கிய நண்பர்கள் ஒன்றியத்தின் தலைவரும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விரிவுரையாளருமான திரு. நா. சுப்பிரமணியஐயர் கூறினார்.

இவ்விழா ஐக்கிய சுருட்டுத் தொழிலாளர் சங்க பணிமனையில் நடைபெற்றது. முதலாவது பிரதியை ஜோதிடர் மு. மார்க்கண்டு பெற்றுக்கொண்டார்.

திரு. சுப்பிரமணிய ஐயர் தொடர்ந்து உரையாற்றுகையில், ஜோதிட ஆய்வு மன்றம் பல ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளது. பண்டிட் நவரத்தினம் ஓர் ஆற்றல் மிக்க ஜோதிடர். அவருடைய கருத்துக்கள் புதியதிருப்பத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி வருகின்றன" என்றார். (கு)

சுயஉதவித் திட்டத்தின் கீழ்கிடைத்த

## கட்டிடப் பொருட்களை மோசடி செய்தாராம்

### நபருக்கு விளக்கமறியல்

(மட்டக்களப்பு

சுயஉதவி வீடமைப்புத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கட்டிடப்பொருட்களை மோசடி செய்த வீட்டின் உரிமையாளர் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு ஆரையம்பதி செல்வாநகர் வீடமைப்புத் திட்டவாசியான திரு பூபாலபிள்ளை புவனேந்திரராஜா என்பவரே கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவராவர்.

தேசிய வீடமைப்புத் திட்டத்தினால் உருவாக்கப்பட்டு வரும் சுயஉதவி வீடமைப்புத் திட்டத்தின்கீழ் மேற்படி நபருக்கும் வீடு வழங்கப்பட்டது. ஆனால் இவர் வீட்டிற்கு ஏழமை போல் அரசாங்கத்தால் வழங்கப்படும் கட்டிடப் பொருட்களை விற்பனை செய்துவந்தாரே தவிர வீடுகட்டும் செயலில் இறங்கவில்லையாம்.

இதுசம்பந்தமாக வீடமைப்புத் திணைக்கள அதிகாரி திரு கே. பத்மநாதன் கணக்கெடுத்தபோது மேற்படி நபர் இருபத்தாறு பை சீமெந்து, ஐந்து கியூப் ஆற்றுமணல், மூன்று கதவுநிலை என்பன விற்பனை செய்துள்ளது தெரியவந்துள்ளது.

இதுதொடர்பாகக் கிடைத்த முறைப்பாட்டை அடுத்து மட்டக்களப்புப் பொலிசார் மேற்படி நபரைக் கைதுசெய்து அரசாங்கத்தை ஏமாற்றும் மோசடிசெய்தார் என்ற குற்றச்சாட்டின் பிரகாரம் மட்டக்களப்பு மாவட்ட நீதபதி திரு. த சுந்தாலிங்கம் முன் முன்னிலையில் ஆஜர் செய்தபோது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் (கு)

## தொலைபேசி பரிவர்த்தனை நிலையம்

(சித்தன்கேணி)

சித்தன்கேணி கணேசவித்தியாசாலைக்கு அருகாமையில் தொலைபேசி பரிவர்த்தனை நிலையம் ஒன்று நிறுவுவதற்கேற்ற ஆரம்ப வேலைகளை வடபிராந்திய தொலைத்தொடர்பு பொறியியலாளர் மேற்கொண்டிருக்கின்றார்.

இதற்கான ஆரம்பவேலைகள் அண்மையில் ஆரம்பமாகியிருக்கின்றன. இந்நிலையத்திற்கு காணி, கட்டிட மற்றும் தேவைகளுக்கு வட்டுக்கோட்டை எம் பி. திரு தா. திருநாவுக்கரசு பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்டத்தில் இரண்டரை லட்சம் ரூபா நிதி ஒதுக்கிக்கொடுத்திருக்கின்றார். (கு)

## தொலைக்காட்சியில் பணயக்கைதிகள்

தெஹ்ரான், டிச. 22 ஈரானில் ஓராண்டுக்கு மேலாக பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருக்கும் அமெரிக்கர்கள் நத்தார்தினத்தை ஒட்டி தொலைக்காட்சியில் தோன்றி பேட்டி அளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன பணயக் கைதிகளைப் படம் பிடிப்பதற்கும் பேட்டி காண்பதற்கும் ஈரானிய அரசு அனுமதி வழங்கியுள்ளது,

பணயக்கைதிகள் சகல வசதிகளுடனும் தற்போது வாழ்ந்து வருகிறார்கள் என்று அவர்களுக்குப் பொறுப்பாக இருக்கும் ஈரானிய அமைச்சர் தெரிவித்துள்ளார். (இ)

## ஈரான்-ஈராக் யுத்தத்தினால் எண்ணை உற்பத்தி வீழ்ச்சி!

தெஹ்ரான், டிச. 22 ஈரான்-ஈராக யுத்தம் காரணமாக மத்திய கிழக்கு நாடுகளின் எண்ணை உற்பத்தி வெகுவாகக் குறைந்துள்ளது

கடந்த அக்டோபர் மாதத்திலேயே 'ஒபெக்' ஸ்தாபன நாடுகளில் எண்ணை உற்பத்தி குறைந்துள்ளது.

சவூதி அரேபியா எண்ணை உற்பத்தியை நாளாந்தம் 8 லட்சம் பீப்பாவாக அதிகரித்தபோதிலும் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

பணவீக்கம் அதிகரிப்பு

## பாதுகாப்பு செலவை இஸ்ரேல் குறைத்துள்ளது

ஜெருசலம், டிச 22 இஸ்ரேல் அடுத்த ஆண்டுக்கான பாதுகாப்புச் செலவினங்களை 25 வீதம் குறைத்துள்ளது.

பணவீக்கம் அதிகரித்துள்ள அடுத்து தயாரிக்கப்பட்ட சிக்கன 'பட்ஜட்'டிலேயே பாதுகாப்புச் செலவினங்கள் குறைக்கப்பட்டுள்ளன.

அங்கு பணவீக்கம் 150 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது (இ)

வேலைநீக்கம் செய்யப்பட்ட

## சுருட்டுத் தொழிலாளிக்கு ரூ. 2 ஆயிரம் நஷ்டஈடு

(யாழ்ப்பாணம்)

வேலைநீக்கம் செய்யப்பட்ட சுருட்டுத் தொழிலாளி ஒருவருக்கு 2 ஆயிரம் ரூபா நஷ்டஈடு வழங்கும்படி தொழில் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

ஆயிரம் சுருட்டுக்கு 50 ரூபா சம்பளம் வழங்கவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து 1979-ம் ஆண்டு நடாத்தப்பட்ட வேலைநிறுத்தத்தின்போது கொக்குவில் மேற்கிலுள்ள க. த. கமலநாதன் என்பவரது சுருட்டுத் தொழிற்சாலையில்வேலை செய்து வந்த சின்னத்துரை சடாச்சரமும் பங்குபற்றினாராம்.

40 ரூபா சம்பளத்தில் வேலை செய்யும்படியும் அல்லாவிட்டால் வேலைக்கு வரவேண்டாம் என்றும் கூறி அத்தொழிலாளியை முதலாளி வேலைநீக்கம் செய்தாராம்

முதலாளிக்கு எதிராக சாவகச்சேரி தொழில் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் அத்தொழிலாளி செய்திருந்தார்

தொழில் நீதிமன்ற நீதிபதி திரு. எஸ். என். குருசாமி இருபகுதியினரையும் விசாரணை செய்தபின் சமரசமாக செல்லும்படியும் அதேவேளை கடந்த 2வருடங்களாகத் மேற்படி தொழிலாளி தொழிலில்லாது இருந்த காரணத்தால் 2 ஆயிரம் ரூபா நஷ்டஈடு வழங்கும்படியும் தீர்ப்பளித்தார். ஜூன் 30ம் திகதிக்குமுன் மேற்படி பணத்தை தவணைமூலமாவது கட்டவேண்டும் எனவும் தெரிவித்தார்.

இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தைச் சேர்ந்த சட்டத்தரணி திரு. எஸ் தியாகராசா வழக்காளி தரப்பில் ஆஜராகி வழக்கை நடத்தினார்.

இலங்கைச் சுருட்டுத் தொழிலாளர் சங்கத் தலைவர் திரு மா. க. முதலியார் சாட்சியமளித்தார். (கொ)

# ஆறு மாதங்களின் பின்னரே புதிய அதிபர் நியமனங்கள்!

## ஆசிரியர்களின் பதவி உயர்வுக்கும் புதியதிட்டம்என்கிறார் ஆணைக்குழு செயலர்

(மாவிட்டபுரம்)

"அதிபர் நியமனங்கள், ஆசிரியர்களுடைய பதவி உயர்வுகள் யாவும் ஆறு மாதங்களின் பின்பே வழங்கப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கும்" என்று கல்விச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் திரு. எம். எச். ஆரியரத்தின தெரிவித்துள்ளார்.

கல்வியமைச்சு ஆசிரியர்களது பதவி உயர்வு தொடர்பாக ஒரு திட்டத்தைத் தயாரித்து வருவதாகவும், அத்திட்டத்தின் அடிப்படையிலேயே பதவி உயர்வுகள் இடம்பெறுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக்குழு ஒன்று தலைவர் திரு டி எஸ் கே. வனசிங்கா, செயலாளர் திரு. தமகாசிவம் ஆகியோர் தலைமையில் கல்விச்சேவை ஆணைக்குழுச் செயலாளரை பேட்டி கண்டபோதே அவர் இப்படித் தெரிவித்தார்.

இப்பேட்டியின்போது அதிபர் நியமனங்கள், பதவிஉயர்வுகள் போன்றவற்றைக் காலதாமதமின்றி வழங்கவேண்டுமெனவும், தமிழ் விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர் நியமனங்களிலுள்ள தாமதம் நீக்கப்படவேண்டுமெனவும், வெளிமாவட்டங்களில் நீண்டகாலமாக பணிபுரியும் விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர்களைச் சொந்த மாவட்டத்திற்கு இடமாற்றம் செய்யவேண்டுமெனவும், விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர் நியமனம். தொடர்பான வர்த்தமானிப் பிரசுரத்தில் யாழ் மாவட்டம் தவிர்க்கப்பட்டதால் யாழ் மாவட்டத்திற்கும் புதிய நியமனங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமெனவும் இக்குழு வற்புறுத்தியது..

ஜனவரி மாதத்தில் புதிய விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர் நியமனங்களை வழங்கி பெப்ரவரியில் இடமாற்றங்களைச் செய்வதாகவும். 81-ம் ஆண்டு முற்பகுதியில மீண்டும் விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்கும்போது யாழ். மாவட்டத்தையும் வெற்றிடமுள்ள மாவட்டமாகச் சேர்த்துக்கொள்வதாகவும் ஆணைக்குழுச் செயலாளர் உறுதியளித்தார். (கு)

★ 150 மூடை மாவு மோசடி

## தலைமறைவாயிருந்தவர் பொலிசாரால் கைது!

(மாவிட்டபுரம்)

56 ஆயிரம்ரூபா பெறுமதியான 150 மூடை மாவு மோசடி தொடர்பாகக் கடந்த 6 மாதங்களாகப் பொலிசாரால் தேடப்பட்டுவந்த நபர் ஒருவர் சுன்னாகத்தில் வைத்து காங்கேசன்துறைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஜூன் மாதம் காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்திலிருந்து லொறியில 150 மாவு மூடைகளை ஏற்றிச் சென்ற நபர் ஒருவர் இம்மாவு மூடைகளை உரிய இடத்தில் சேர்ப்பிக்காது யாழ்ப்பாணத்திலுள்ள பல கடைகளுக்கு விற்பனைசெய்து மோசடி செய்தாராம்.

இதுபற்றி ஏற்கனவே சிலரைக் கைதுசெய்த பொலிசார் மோசடி செய்யப்பட்ட மாவு மூடைகளில் ஒருபகுதியை யாழ்ப்பாணக் கடைகள் சிலவற்றிலிருந்து மீட்டதுடன் முக்கிய நபரான சதாசிவம் புஷ்பராசா என்பவரைத் தேடி வந்தனர்.

இந்நபரைக் காங்கேசன்துறை பொலிஸ் குற்றத்தடுப்புப்பிரிவு சப்-இன்ஸ்பெக்டர் திரு. சில்வா தலைமையிலான பொலிஸ் கோஷ்டி சுன்னாகத்தில் வைத்துக் கைதுசெய்துள்ளது

இந்நபர் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் இம்மாதம் 26-ம் திகதி வரை றிமாண்டில் வைக்கப்பட்டார். (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

கடவுளுக்காக தாக முற்றிருப்பவனுக்கு அன்னம் பானம் போன்ற அற்பவிஷயங்களிலே எண்ணத்தைச் செலுத்துவது முடியாது போகும்.
—ஸ்ரீராமகிருஷ்ணர்.

## நமது நோக்கு

### கூட்டுறவும் பெண்களும்

தன் காரியத்தைத் தான் பார்த்துக் கொண்டு யோக்கியமாக வாழ்வது ஒருவித வாழ்க்கை. ஊரெல்லாம் ஒன்று என்று சுற்றிலுமுள்ளவர்களோடு சேர்ந்து வாழ்வது மற்றொருவிதம்.

சமூகக்கூட்டுறவில் தமிழ் மக்கள், சிறப்பாக கடந்த காலத்தில் சிறந்த சாதனைகளை நிலைநாட்டியிருக்கின்றனர்,

இவர்கள் இரத்தத்தில் சமூகக் கூட்டுறவு கலந்திருக்கிறது என்று இலங்கையின் முதற்பிரதமர் டீ. எஸ். சேனநாயக்கா தொடக்கம் பல சிங்களத் தலைவர்கள் புகழ்மாலை சூட்டிவிட்டதோடு தென்பகுதி மக்களுக்கு நாம் ஒருமுன்மாதிரி என்றும் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

யாழ்ப்பாணத்தின் கம்பீரமான வீரசிங்கம் மண்டபம் எங்கள் கூட்டுறவின் கடந்தகால வெற்றிவாகை என்று சொல்வது மிகையல்ல

உலகுக்குபதேசம் செய்த முனிவரின் திருக்குறளில் இன்றைய சமூகக் கூட்டுறவின் உள்ளுடன் இருப்பதாகத் தெரிகிறது. 'ஒப்புரவறிதல்' என்கிற உபதேசம் திருக்குறளின் தனிப்பட்ட சிறப்பு. ஒப்புரவறிதல் என்னும் உலக நடையினை அறிந்து செய்தல்; ஒருவர் தம் வருவாய் அளவுக்கு ஏற்பத் தக்கார்க்குத் தக்கன அறிந்து கொடுத்தலென்று அதை விபரிக்கலாம்,

ஒப்புரவறிந்து வாழ்தல் என்பதன் பொருள் ஊராரும் தானும் ஒன்றெனக் கருதி வாழ்தல், இதுவே சமூகக் கூட்டுறவின் மூலவேர். எனவே முனிவரின் கருத்து தமிழ் மக்களுக்குத் தனிச்சுவை கொடுப்பதில் எவ்வித ஆச்சரியமுமில்லை:

ஆயினும் இன்றைய நிலையில், கடந்தஆட்சிதொடக்கம் இன்று வரைக்கும் கூட்டுறவு இயக்கம் இயற்கையாய் வேரூன்றி வளர்ந்த வளர்ச்சி குன்றிவருவது கவலைக்குரியது.

சமூகமே கூட்டுறவுச் சித்தாந்தத்தை புறக்கணிக்குமளவில், தவறான மதிப்புகளை உண்டாக்கிக்கொண்டு அனாவசிய பண்டங்களை வாங்கவோ உற்பத்தி செய்யவோ முற்படுகின்றோம். நாமெல்லோரும் ஒரு பாவனையாளர் கூட்டமாய் மாறி வருகின்றோம்

செய்வதென்னதென்று தெரியாமல், பணப்பையைத் தூக்கிக்கொண்டு, பஸ் கட்டணம் அதிகரித்துள்ள காலத்திலும் நவீன சந்தைக்குப்பயணஞ்செய்து அங்கு அலங்கரிக்கப்பட்டுள்ள பொருட்களில் எதனை வாங்கலாமென்று தலை உடைக்கின்றோம் இன்றையவாழ்க்கைத்தத்துவம் எம்மை ஒரு பொருளாதார பிராணியாகச் செய்துவிட்டது

இதுவே வீட்டில், அயலில், கிராமத்தில், மாவட்டத்தில், நாட்டில் ஏன், அல்ல உலகிலுமே பொருளாதாரச் சிக்கல்களை உண்டுபண்ணி, வன்முறையையும், போர்களையும் உருவாக்குகின்றது.

இந்த நிலையை எங்கள் தாமவாழ்வின் அடிப்படையில் மாற்றி அமைக்கும் பொறுப்புடையவர்கள் பெண்களே! இத்தகைய கருத்தை அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடந்த கருத்தரங்கில் உரைத்தவர் அனைத்துலக கூட்டுறவு இணைப்புச் சம்மேளனத்தின் தென்கிழக்காசியப்பிரதேச நெறியாளர் திரு. ஆர். பி. இராஜகுரு அவர்கள்

கூட்டுறவு நல்ல வளர்ச்சி அடைவதற்கும் அதன் பயனைச் சமுதாயம் முழுமையாகப் பெறுவதற்குப் ஆண்கள் மாத்திரம் உழைத்தால் போதாது; பெண்களும் அதே இயக்கத்தில் சேர்ந்து தீவிரமாக உழைக்கவேண்டுமென்பதே அவருடைய அறைகூவல்.

இது செவிடன் காதில் ஊதிய சங்கு என்றுநாம் கருத முடியாது.

இக்கருத்தரங்கிற்குத் தலைமை வகித்தவர் யாழ். மாவட்டக் குழுவின் தலைவி திருமதி வேதவல்லி கந்தையா மக்கள் தகுதிக்கேற்ற தலைவர்களே எந்த இயக்கத்தையும் உருவாக்க முடியும், இது உண்மையானால் யாழ் மாவட்ட மகளிர் இத்துறையில் அரும் பெருஞ்செயல்களைத் தொடர்ந்து ஆற்றமுடியும். பொதுநலவாழ்வில் இருளடைந்திருக்கும் எங்கள் மாவட்டம் இன்றைய தலைமையில் பெண்கள் தம் உழைப்பினால் ஊருக்கு உகரியும் தம் இல்லற சுதந்திரத்திற்கு பாதுகாப்பளிக்கும் வகையிலும் நாட்டுக்கு முன்மாதிரியாகத் திகழும் என்பது எமது நம்பிக்கை.

---

1979 ஏப்ரல், ஆகஸ்ட் பரீட்சைகளை சமமாகக்கருதும் பல்கலைக்கழக அனுமதியை

# இடைநிறுத்தக் கோரும் மனு செலவின்றித் தள்ளுபடி

## அப்பீல் நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

சடந்த ஆண்டு ஏப்ரலிலும் ஆகஸ்டிலும் நடைபெற்ற ஜி. சி. ஈ. உயர்தர பரீட்சைகள் இரண்டையும் சமமான தரமாகக் கருதி இருபரீட்சைகளினதும் புள்ளிகள் அடிப்படையில் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களைத்தெரிவு செய்யும் பல்கலைக்கழக மானியக் குழுவின் நடவடிக்கையை இடைநிறுத்துமாறு உத்தரவிடும்படி அப்பீல் நீதிமன்றத்தில் மூன்று மாணவர்களினால் தாக்கல் செய்யப்பட்ட ரிட்மனு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்யப்பட்டது.

இரு பரீட்சைகளினது புள்ளிகளையும் ஒன்றாக இணைத்து பல்கலைக்கழக மானியக் குழுவுக்குக் கொடுக்க வேண்டாம் என்று பரீட்சை ஆணையாளருக்கு உத்தரவிடுமாறு அதே மாணவர்கள் தாக்கல் செய்த மற்றுமொரு மனுவையும் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது

79 ம் ஆண்டு ஏப்ரலில் நடைபெற்ற பரீட்சையில் தோற்றிய மாணவர்களான எம். டபிள்யூ வசந்தா டி சிலவா, (பாணந்துறை) என். எச். ஹேவா பராக்கிரம (பாணந்துறை), டபிள்யூ ஏ. கே. லெஸ்லி வீலானந்த (காலி), ஆகியோரே இம் மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர்

அப்பீல்நீதிமன்ற நீதியரசர்கள் திருவாளர்கள் பரிந்தாரணசிங்கா, எச். டி தம்பையா ஆகியோரே இம்மனுக்களைத் தள்ளுபடி செய்தனர்.

இருநீதியரசர்களினதும் சார்பில் நீதியரசர் தம்பையா அளித்த தீர்ப்பில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்;-

மனுதார்கள் தமது மனுக்களில் குறிப்பிட்டதுபோல் 1979-ம் ஆண்டு ஏப்ரலிலும் ஆகஸ்டிலும் நடைபெற்ற இரு பரீட்சைகளுமே ஒரேதரமுடையவை அல்ல என்பதை நான் ஏற்றுக்கொள்ள விரும்பினாலும் இம்மனுதார்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் தீர்ப்பளிக்கமுடியாத நிலையில் இருக்கிறேன். இதுகுறித்து ஏற்கனவே உயர்நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பை எமது அப்பீல் நீதிமன்றத்தின் தீர்ப்பு நிராகரித்துவிடும் என்பதாலேயே அவ்வாறு வழங்கமுடியாத நிலை உள்ளது. (இ)

---

## மிருதங்க அரங்கேற்றம்

(மட்டக்களப்பு)

பிரபல மிருதங்கவித்துவான் ஆனைக்கோட்டை மயில்வாகனம் கந்தசாமியின் சிஷ்யரான செல்வன் இ கலையரசனின் மிருதங்க அரங்கேற்றம் இம்மாதம் 27ம் திகதிசனிக்கிழமை மட்டக்களப்பு நகரமண்டபத்தில் பொலிஸ் அத்தியட்சகர் திரு. சீ. அம்பிகாபதி தலைமையில் நடைபெறவுள்ளது.

12 வயதுடைய இச்சிறுவன் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி ஏழாந்தர மாணவனும், மட்டக்களப்பு விசேட குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவைச் சேர்ந்த திரு.எஸ். இரவீந்திரராஜாவின் புதல்வருமாவார். (கு)

---

## 'அரசியல் நிர்ணய சபையை உருவாக்க உலக நாடுகளின் ஆதரவு தேவையில்லை'

### நீர்வேலிக் கருத்தரங்கில் குமார் உரை

(யாழ்ப்பாணம்)

தமிழ்பேசும் மக்கள் கூட்டணிக்கு வாக்களித்தால், அரசியல் நிர்ணயசபையை உருவாக்கி தமிழ் ஈழத்தை அமைப்போம் எனக் கடந்த தேர்தல் கூட்டங்களில் கூட்டணியினர் கூறினர். இதுவரை எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை. இதனை நிறைவேற்ற உலக நாடுகளின் ஆதரவு எதுவும் தேவையில்லை. ஆனால் இது வரை அரசியல் நிர்ணயசபையைக் கூட்டவில்லை.

நீர்வேலி வடக்கு காமாட்சி அம்பாள் சனசமூக நிலையத்தில் நடந்த கருத்தரங்கில் தமிழ்க் காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினார்.

ஆசிரியர் எஸ். துரைசிங்கம் தலைமையில் நடந்த இக்கருத்தரங்கில் திரு. குமார் பொன்னம்பலம் மேலும் கூறியதாவது: அரசியல் நிர்ணயசபையைக் கூட்டாது, கூட்டணியினர் இன்று மாவட்ட அபிவிருத்திச் சபைகளை ஏற்றுள்ளனர்.

பாராளுமன்றம் செல்வதன் மூலம்தான் தமிழ்ஈழப் பிரச்னையை உலகறியச் செய்யமுடியும் எனக் கடந்த தேர்தலின் போது கூட்டணியினர் கூறினர். பலஸ்தீன விடுதலை இயக்கமோ அன்றி அதன் தலைவர் யசீர் அரபாத்தோ இதுவரை எந்தப் பாராளுமன்றமும் செல்லவில்லை, அப்படியிருக்க அவர்களால்மட்டும் எவ்வாறு தங்களின் போராட்டத்தை உலகறியச்செய்ய முடிந்தது?

வட்டமேசை மாநாடு, அரசியல் தந்திரம், தீர்க்கமான பேச்சுவார்த்தைகள்மூலம்தான் தமிழ்மக்களை எதிர்நோக்கியிருக்கும் மொழி, கல்வி, வேலைவாய்ப்பு, குடியேற்றம் ஆகியவற்றைத் தீர்த்து வைக்க முடியும். தமிழ்க் காங்கிரஸிற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால் மேற்படி ஆயுதங்களையும் பாவித்துத்தான் தமிழ் மக்களின் பிரச்னைகளைத் தீர்த்து வைக்கும்.

கடந்த 30 வருடங்களாக சமஷ்டி, சமஅந்தஸ்து என்று கூறிவந்தவர்கள் 76-ம் ஆண்டு வட்டுக்கோட்டை மகாநாட்டில் கடந்த 30 வருடங்களாகக் கூறிவந்தவற்றைக் கைவிட்டு 'தமிழ் ஈழம்' என்ற முடிவை எடுத்தனர். தமிழ் மக்களின் பிரச்னைகளைத் தீர்க்க முடியும் என்ற முடிவிற்கு வந்தனர்.

தமிழ் ஈழம்தான் எமது இறுதி முடிவு என்று பண்ணாகத்தில் தீர்மானித்தவர்கள் இன்று அதையும் கைவிட்டு ஒற்றையாட்சியின் கீழ் நாட்டை அபிவிருத்தியடையச் செய்வதுதான் எமது கொள்கை என்று கூறிக்கொண்டு அபிவிருத்திச் சபைகளில் முக்கிய பதவிகளைக் கைப்பற்றுவதற்காகப் பெரும் முயற்சிகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

எமது கட்சி ஆரம்பகாலம் முதல் அபிவிருத்தியைத்தான் நோக்கமாகக்கொண்டு செயல்பட்டு வந்தது. எமது கட்சிக்கு மந்திரிப் பதவி அளிக்கப்பட்ட போது வட கிழக்கு மகாணத்தை அபிவிருத்தியடையச் செய்ய வேண்டும். அங்குள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று எண்ணி இரு மாகாணங்களிலும் பல தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன. குடியேற்றத் திட்டங்கள் அமைக்கப்பட்டு அங்கு தமிழ் மக்கள் குடியேற்றப்பட்டனர். அப்போது பலமாக எதிர்த்தவர்கள் இப்போது அபிவிருத்தி பற்றி ஆதரித்துப் பேசுகிறார்கள்

நாடு அபிவிருத்தியடைந்தபின் தமிழ் ஈழம் அமைப்போம் என்று கூறுபவர்கள் எந்தவழியில் தமிழ் ஈழம் அமைப்போம் என இதுவரை ஏன் மக்களிடம் கூறவில்லை.

தமிழ் ஈழத்தை வழங்க மறுக்கும் அரசுடன் பாராளுமன்றப் பேச்சுவார்த்தை நடாத்துவதன் மூலமோ, அகிம்சை வழியில் போராடுவதன் மூலமோ தமிழ் ஈழத்தைப் பெறமுடியாது. போராட்டத்தின் மூலம்தான் தமிழ் ஈழத்தைப் பெறமுடியும். (கொ)

---

## மக்கள் கருத்து

### தமிழ் மொழி புறக்கணிப்பு

மன்னார் அரசினர் ஆதார வைத்தியசாலையில் அண்மையில் நடைபெற்ற மக்கள்தின விழாவில் தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டது குறித்து பொது மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

பொதுமக்களின் உதவிகளாலும், சிரமதானங்களாலும் மன்னார் அரசினர் ஆதார வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகளையிட்டு பொதுமக்களைக் கௌரவிக்கவே இவ்விழா நடைபெற்றது.

இவ்விழாவில் ஏராளமான பொதுமக்கள் கலந்துகொண்டனர். இவர்களில் 75 வீதமானோர் தமிழ்மட்டும் தெரிந்தவர்கள் ஆனாலும் இவ்விழாவில் உரையாற்றிய அனைவரும் ஆங்கிலத்திலேயே உரையாற்றினர். இவர்களின் உரையை பெரும்பான்மைப் பொதுமக்களால் விளங்கிக்கொள்ள முடியவில்லை. இங்கு உரையாற்றியவர்களில் சிலர் தமிழர்கள் இவர்களும் ஆங்கிலத்திலேயே உரையாற்றினர். இவர்கள் ஆங்கிலத்தில் உரையாற்றினாலும் அதனை மொழிபெயர்த்துச் சொல்ல ஒருவரை நியமித்திருக்கலாம்.

விழாவிற்குத் தலைமைவகித்தவர் ஒரு தமிழர். இவர் ஆங்கிலத்திலேயே தமது தலைமை உரையை நிகழ்த்தினார். வரவேற்புரை நிகழ்த்திய மன்னார் மாவட்ட வைத்திய அதிகாரி திரு. இ. குமரப்பா பிள்ளை ஆங்கிலமும், தமிழும் கலந்த உரையை நிகழ்த்தினார். மன்னார் எம். பி திரு. பி. எஸ் சூசைதாசன் ஆங்கிலமும் தமிழும் கலந்த உரை நிகழ்த்தினார். இவர்களுடன் விழாவின் முடிவில் நன்றியுரை நிகழ்த்தியவர், வைத்தியசாலை அபிவிருத்திச்சபையின் முக்கிய பிரமுகர், ஒரு தமிழர் இவரும் தனது நன்றியுரையை ஆங்கிலத்திலேயே நிகழ்த்தினார்.

இனிமேலாவது இப்படியான தவறுகளை நடைபெறாமல் தடுக்க வேண்டும்.

சி. தர்மகுலசிங்கம்
மன்னார்.

---

## ப. நோ. கூ. சங்க விருந்துபசாரம்

(சி. தன்கேணி)

சங்கானை ப. நோ. கூ. சங்க பணியாளர் நலன்புரிச்சங்கத்தின் வருடாந்த விருந்துபசார விழா இம்மாதம் 31ம் திகதி புதன்கிழமை பகல் - திரு. இ. நடேசு தலைமையில் நடைபெறவிருக்கின்றது.

பிரதம விருந்தினராக சங்கானை ப. நோ கூ. ச. சமாசத் தலைவர் திரு. எஸ். லோகேஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ அமிர்தலிங்கம் வட்டுக்கோட்டை எம். பி திரு. சா. திருநாவுக்கரசு ஆகியோரும் பங்குபற்ற இருக்கின்றனர். பணியாளர்களுடைய கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (ஏ)

---

## ப.நோ.கூ.ச. கொள்முதல்

[மன்னார்]

அடுத்த வருடம் காலபோக விவசாயத்தின் மூலம் கிடைக்கும் நெல்லினை மன்னார் மாவட்டத்திலுள்ள பல நோ. கூ. சங்கங்கள் கொள்முதல் செய்யவுள்ளன.

இதே வேளை மன்னார் நெல் சந்தைப்படுத்தும் பகுதியினர் காலபோக விவசாயத்தின் மூலம் கிடைக்கும் நெல் அனைத்தினையும் கொள் முதல் செய்யவுள்ளனர். கஷ்டமான பகுதிகளுக்குச் சென்று நெல்லினை கொள் முதல் செய்யும் பொருட்டு அதிக முகவர்கள் நியமிக்கப்படவிருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 'பாரதியைப்படைத்தளித்த பாரதியின் மனோநிலை ஆய்வு

(முன்தொடர்ச்சி)

காதலினால் மானிடனின் அகவாழ்வுக்கு காவல் அரண் இட்டு காமத்தால் கருத்தழியாது காத்திடத்துடித்த பாரதியின் கண்கள் சமுதாயத்து யதார்த்த கோலங்களைச் சந்திக்கும் போது அவன் நெஞ்சம் கவிதைப் பெருமூச் செறிகிறது. ''மாதரெல்லாம் தம்முடைய விருப்பின் வண்ணம் மனிதருடன் வாழ்ந்திடலாம் ''எனும் மேலைநாகரீகத்தை கீழைமக்களும், நாகரீகமெனும் புதுச்சட்டையாக விரும்பி அணிவதைக் கண்டு கொதித்தது பாரதியின் தமிழ் நெஞ்சு..... ''பேதமின்றி மிருகங்கள் கலத்தல் போல பிரியம் வந்தால் கலந்தன்பு பிரிந்து விட்டால் வேதனையொன்றில்லாதே பிரிந்து சென்று வேறொருவன்றனைக் கூடவேண்டும் என்பார். ''எனஎழுதி மேலைப்பண்பை மிருக வாழ்வாக காட்டி 'நம் தமிழர் நெஞ்சங்களை மாற்ற நினைக்கிறார் பாரதி.

### தமிழ்வாழ்வு புனருத்தாரணம்!

அதேவேளை பெண்ணை இன்பப் பொருளாக நோக்குகின்ற தன்மையையும் கவிதை வாள் கொண்டு தாக்குகிறான் பாரதி.

''சோரரைப் போல் ஆண்
மக்கள் புவியின் மீது
சுவைமிக்க பெண்மைநல
முண்ணுகின்றார்
காரணந்தான் யாதெனிலோ
ஆண்களெல்லாம்
களவின்பம் வருகின்றார்
கற்பேமேலென்று
ஈரமின்றியெப்போதும் உப
தேசங்கள்
எடுத்தெடுத்துப் பெண்ணி
டம் இயம்புவாரே''

எனச் சமுதாயத்தில் பெண்களின் இழிநிலைக்கு காரணம் இன்பத்தை ஏற்றுக்கடமையை மறக்கும் ஆண்கள் எனத் தெளிவாகக்காட்டுகிறான். அதேவேளை ஒருவனுக்கு ஒருத்தி எனும் வள்ளுவனின் தமிழ் வாழ்வுத் தத்துவத்தை பாரதி பாடல்கள் புனருத்தாரணம் செய்யமுயல்கின்றன.

### பக்தி உரம்

இவ்வாறாக காமத்தை வெறுத்துக் காதலைவாழ்த்தி மானிடத்து பாலியல் உணர்வை ஆக்கசக்தியாகக் காணும் பாரதி மானிடசக்தியை வளர்க்கும் உரமாகப் பக்தியைத்தூவுகிறான். ஆனால் பாரதி பக்திநெறி நின்று பாடல் இயற்றினாலும் மத வெறிக்கு அவன் என்றுமே ஆளாகியதில்லை.

**— பற்றிமாகரன் —**

''ஆத்திசூடி இளம் பிறை
யணிந்து
மோனத்திருக்கு முழுவெண்
மேனியான்
கருநிறங்கொண்டு பாற்
கடல் மிசைக்கிடப்போன்
மகமது நபிக்கு மறையருள்
புரிந்தோன்
ஏசுவின்தந்தை எனப்பல
மதத்தினர்
உருவகத்தாலே உணர்ந்து
ணராது
பலவகையாகப் பரவிடும்
பரம்பொருள்
ஒன்றே அதனியல் ஒளிவு
றும் அறிவாம்
அதனிலை கண்டார் அல்
லலை அகற்றினர்
அதனருள் வாழ்த்தி அமர
வாழ்வு எய்துவோம்''

தவர். எனவே பாரதியின் மனதில் பழமைமிகு சைவ நெறிஅடிப்படையில் தெளிந்த பக்தி வெள்ளம் ஊற்றெடுத்து மானிடரின் அகவாழ்வுக்கு ஊட்டமளிக்கும் கனிப் பொருள்நீராக கவிதைவடிவு பெறுவதில் வியப்பில்லை. பாரதத்தின் சமுதாய அநீதிகளுக்கு மதங்கள் மறைமுகக் காரணிகளாய் நின்றதை பாரதி மறுக்கவில்லை. ஆனால் அவன் மதசீர்திருத்தத்தை விரும்பினனேதவிர நாத்தீகத்தை வேரோடு வெறுத்தான். அவன் தனது சுயசரிதைக்கவிதையை முடிக்கையிலே ''பூமியிலே நீ கடவுளில்லையென்று புகல்வது நின் மனத்துக்குள்ளே புகுந்த மாயை சாமிநீ அம்மாயை தன்னை நீக்கிச்ச தாகாலம் ''சிவோஹ'' மென்று சாதிப்பாகய் நம்பிக்கையின் தெளிவாகக்கூறலாம்.

### நம்பிக்கையின் துணிபு

வறுமையில் உழன்று விடுதலைக்காக பலகொடுமைகளை அனுபவித்த பாரதி சாதாரண நிலையில் வைத்து நோக்கப் போனால் ஒரு நாத்தீகனாக மாறியிருக்க வேண்டியவன். ஆனால் இதற்கு முற்றிலும் மாறாக அவன் இறைதுதி இயம்பும் இலக்கிய வீணையாகி சமுதாயக் கொடுமைகளுக்கும் இறை உணர்வால் பாடைகட்டப்பாடுவது அவன் பகவத்

இதேசெய்யுளில் சொல்லப்படுகிறது. ''இனியொருவிதி செய்வோம் - அதை எந்நாளும் காப்போம் - தனியொருவனுக்குணவிலையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்'' என்பதால் பசிக்கொடுமைக்காகவும் ''எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் இந்நாட்டுமன்னர்'' என்பதால் சாதி - பிரதேச மாநில வெறிப்பேய்களை அழிக்கவும் பாரதி பொதுஉடமையை விரும்புகிறான். இது அவனது சமுதாய நல்நோக்கச் சிந்தனையின் பிரதிபலிப்பு. ஆனால் தனது பொதுஉடமையை இறைவனுடன் இணைத்துப்பார்ப்பது அவனது பக்திமனதின் வெளிப்பட்டு. ''எல்லா உயிர்களிலும் நானே இருக்கிறேன்' என்று உரைத்தான் கண்ண பெருமான் - எல்லாரும் அமரநிலை எய்தும் நன்முறையைஇந்தியா உலகிற்களிக்கும் இதுவே பாரதி சமுதாய நல்நோக்கை பக்திஉணர்வோடு. சங்கமிக்க வைக்கும் சந்தி எனலாம். எல்லா உயிர்களிலும் இறைவனைக் கண்டு நிற்கும் பாரதியின் கண்ணன் நெஞ்சம் எல்லாரையும் அமரநிலை எய்த வைக்கும் ஒரு முறையை இந்தியப் புண்ணிய பூமி உலகிற்கு அளிக்கும் என உறுதியாக நம்பினான். அவன் நம்பிக்கைக்கு காரணம் அக்கால கட்டத்தில் உலகிலேயே புதுமையான அரசியல் அகிம்சையை காந்தி ஒரு உபகண்டத்தை மீட்கும் பேராயுதமாக பயன்படுத்திக் கொண்டிருந்தார். ஆகவே பாரதியின் நம்பிக்கை வீண்போகவில்லை. இந்தியா உலகளிக்கும் எனும் வரியை மூன்று முறை அழுத்திப் பாடுவதால் கவிஞன் தனது நம்பிக்கையை

## அறிவியல் பூஞ்சோலை

என்பதே பாரதியின் கடவுட் கொள்கையின் அடித்தளம் இங்கு குறிப்பிடப்படும் அமர வாழ்வை அனைத்து மக்களும் அடைந்திடல் வேண்டும் என்பதே அவன் அவா. ஒருவகையில் பார்க்கப் போனால் பாரதிக்கு பக்திப் பாலை ஊட்டியமுலைகள் தமிழ் இலக்கிய நங்கையின் நயனக கொங்கைகளாம் காப்பியங்களை என்றே கூறவேண்டும். பாரதி சைவ நெறியில் வேரூன்றி வளர்ந்த பயிர். சங்கரரின் வேதக்கொள்கையை உண்டு வளர்ந்தவர் பாரதி விவேகானந்தரின் கிஷ்யை நிவேதிதாதேவியை ஞான. குருவாக ஏற்றுமகிழ்ந் கீதைமேல் கொண்ட நம்பிக்கையின் துணிபு என்றேகூற வேண்டும். அவன் தனது சமுதாய நல்நோக்கை ஆத்மீகத் இணைக்கும் சந்தியாக பாரத சமுதாயம் எனும் அவனது கவிதை இலங்குகிறது.

### பாரதியின் பொதுவுடைமை

பாரத சமுதாயத்தில் ''முப்பது கோடி ஜனங்களின் சங்கம் முழுமைக்கும பொதுவுடமை-ஒப்பில்லாத சமுதாயம் உலகத்துக்கொரு புதுமை - வாழ்க'' என பொது உடைமையின் தேவையினைப் பாடுகிறான். அவன் பொதுஉடமையை விரும்புவதன் காரணமும் தான் எவ்வளவு தூரம் பற்றிப் பிடித்திருந்தான் என்பதைப் படம் பிடித்துகாட்டுகிறான். ஆனால் இந்திய இறை உணர்வோடு இசையந்த அரசியல் கொள்கையால் தனது விடுதலையைப் பெற்றாலும் சமுதாய வாழ்வில் பாரதி எண்ணிய எல்லாரும் அமரநிலை எய்தும் நல்முறையைத் தரத்தவறியதால் மிகக் குறுகிய காலத்திலேயே பாரதிதாசனே ஒரு நாத்தீகவாதியாகி நிற்பதையும் பாரதி வாழ்ந்த தமிழகம் சிவப்பு கறுப்பு வர்ணத்து பகுதிப் பொதுவுடமை வாதத்துள்

(8-ம் பக்கம் பார்க்க)

## ✯ அரசியல் விஞ்ஞானம்

# மக்களுக்கும் அரசுக்குமிடை ஊஞ்சலாடும் இறைமை

(கடந்த இதழ் தொடர்ச்சி)

இறைமை கொள்கை என்பது காலத்திற்குக்காலம் சமூக அரசியல் சூழ்நிலைகளுக்கேற்ப வடிவு பெற்ற வளர்ந்த இறைமை பற்றிய வியாக்கியானங்களின் தொகுப்பு என்றே கூறவேண்டும். அரசியல் உலகில் விளங்குவதற்கும் விளக்குவதற்கும் மிகவும் சிக்கலாக இருக்கும் இறைமைபற்றிய விரிவான ஆய்வை பிரான்சிய அரசியல் அறிஞரான போடிசேன ஆரம்பிக்கிறார். படையெடுப்புக்களும் மக்கள் புரட்சிகளும் குழப்பங்களும் இடை வாழ்ந்த இவரது சிந்தனை இப்புறத்தாக்கங்களால் இவற்றைச் சமாளித்து அமைதியை சுபீட்சத்தை அடையக்கூடியஒருதன்மையை அரசு பெறவேண்டும்என வளர்ந்தது. இதன் விளைவாகவே ஜீன் போடினின் ''குடிமக்கள் மீதும் சாமான்யர்சட்டத்தால் கட்டுப்பாடின்றி அதிகாரம் செலுத்துவதே இறைமை'' என்ற இறைமையின் வரைவிலக்கணம் பிறந்தது. ஆயினும் இவ் அதிகாரத்தை ஒருவரிடமா பலரிடமா ஒப்படைக்கவேண்டும் என்பதில் இவர் குழப்பத்தில் ஆழ்ந்தார். அதேபோல் இயற்கை பொருளாதாரத்தையே ஆட்டிப்படைக்கிறது எனவும் தெய்வநம்பிக்கை பெரிதெனவும் கருத்துக்கள் நிலவிய பிரான்சியகுடிமகனான ஜீன் போடின் பிரான்சுக் குடிமகனுக்கே உரிய பொதுப்பண்போடு தெய்வநீதிக்கும் இயற்கை சட்டங்களுக்கும் இறைமை கட்டுப்படாது என எழுதிச்செல்கிறார்.

ஆனால் இங்கிலாந்தின் உள்நாட்டுப் போர்க்காலத்தில் வாழ்ந்தவர்களும் தன் தனிப்பட்ட வாழ்க்கையில் பாதுகாப்பு இன்மையால் இன்னல்கள் பலவற்றைச் சந்தித்தவருமான ஹொப்ஸ் இப்புறத் தாக்கங்களால் இறைமைக்கு 'தனிமுதன்மையை' அளித்து வரைவு எழுதுகிறார். அரசுக்கு இருக்கும் இறைமை எதனாலுமே தட்டிக்கேட்க முடியாததும் தட்டிப்பறிக்க முடியாததுமான ஒன்றாக இவர் கருதுகிறார்.

இவர்களது கருத்துக்களின் பிரதிபலிப்போடு இவ்இறைமையை அமுலாக்கும் மேலான இறைமையாளன் ஒருவனைவிளக்கி அவனை உள்ளடக்கிய சமூகமே சுதந்திரமான அரசியல் சமூகம் என அடித்துக் கூறுவதே இறைமையின் மோனிஸ்டிக்கொள்கை எனப்படும் ஒஸ்ரினின் இறைமைக் கொள்கை தனக்கு நிகரான ஓர் உயர்அதிகாரத்திற்கு வாடிக்கையான பணிதலைத்தராத ஒரு நிர்ணயிக்கப்பட்ட மானிடமேன்மையாளர் ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் பெரும்பாலானவருடைய பணிதலை வாடிக்கையாகப் பெறுவாரானால் அந்த நிர்ணயிக்கப்பட்ட மேன்மையாளரை அந்தச் சமூகத்தின் இறைமை ஆளர் எனவும் அந்தச்சமூகம் (நிர்ணயிக்கப்பட்ட அந்த மேன்மையாளரையும் உள்ளடக்கி) சுதந்திரமான அரசியல் சமூகம் ஆகும்'.

இப்புகழ்மிக்க ஒஸ்ரினின் இறைமை கோட்பாடு நான்கு கருத்துக்களை வலியுறுத்துகிறது. (i) ஒவ்வொரு அரசிலும் குடிமக்களின் பணிதலை என்றும் பெறக்கூடிய ஒரு மானிட மேன்மையாளர் உண்டு. ii) அந்த மானிட மேன்மையாளர் பிறப்பிப்பது தான் ஆணை சட்டம். (iii மேன்மையாளர் பெற்றிருக்கும் அதிகாரமே இறைமை (iv இறைமை பகுக்கவோ பிரிக்கவோ முடியாத வரம்பில்லாச்சக்தி என்பதே அந் நான்கு கருத்துக்களுமாகும். ஆனால் பிற்பட்ட அரசியல் அறிஞர்களான லாஸ்கி, பாக்கர்கோல், லின்ட்சே போன்ற பலர் ஒஸ்ரினின் இறைமைக் கோட்பாட்டைக் கடுமையாக விமர்சித்துச் செல்வதைக் காணலாம். ஹென்றிமெயின் இறைமை நிர்ணயிக்கப்பட்ட மேன்மையாளர் ஒருவரிடமே தஞ்சம் புகுகிறது எனும் ஒஸ்ரினின் கோட்பாட்டு முதல் விளக்கத்தைக் கடுமையாகக் கண்டிக்கிறார். சமூகத்தின் மரபுவழி வந்த சட்டங்களுக்குக் கட்டுப்பட்டே எந்த ஒரு இறைமையாளனும் இயங்குகிறான். எனவே ஒஸ்ரினின் மேலான இறைமையாளன் நடைமுறையில் காண முடியாத கற்பனை வடிவாகவே கருதப்படுகிறது. ஒஸ்ரின் இறைமையாளனின் ஆணையே சட்டமெனக் கூறிவிடுகிறார் மரபுகள் வழக்காறுகள் பழக்க வழக்கங்கள் போன்ற பல சமூக காரணிகளின் கலப்பாகவே சட்டம் பிறப்பாவது சரித்திரம் எனவே ஒரு இறைமையாளனின் ஆணையே சட்டமெனும் கூற்று வலியற்றதாகிறது.

மேலும்ஒஸ்ரினின் இறைமை கோட்பாட்டின்படி இறைமையைப் பிரிக்கவோ பகுக்கவோ முடியாது இதனைப் பல அரசியல் அறிஞர்கள் மறுத்துரைக்கின்றனர் இவ்விதமறுத்த கோட்பாடே பன்மையாளரின் இறைமைக்கொள்கை எனப்படும் கொள்கை. இவர்கள் ஒஸ்ரின் கூறும் இறைமையின்சட்ட வாக்கத்தன்மையைச் சாடுகின்றார்கள்.

— தொடரும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மலையகத்தவர் குடியேறியுள்ள காணியை அவர்களுக்கே சொந்தமாக்குங்கள்"

## யாழ். மாநகரசபை தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

விசேட படி 70 ரூபாவை தேயிலை, றப்பர் தோட்டத் தொழிலாளர் அனைவருக்கும் வழங்க ஆவன செய்யுமாறு நிதி அமைச்சரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் யாழ். மாநகர சபைக் கூட்டத்தில் நிறைவேறியது.

யாழ். மாநகர சபைக் கூட்டம் முதல்வர் திரு இராசா விஸ்வநாதன் தலைமையில் நடைபெற்றபோது, திரு. ம. அலோசியஸ் மேற்கண்ட தீர்மானத்தைக் கொண்டு வந்தார்.

இத்தீர்மானத்தின் பிரதிகளை ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், பெருந்தோட்டத் தொழில் அமைச்சர் ஆகியோருக்கும் அனுப்புவதென முடிவு செய்யப்பட்டது.

திரு. ம. அலோசியஸ் கொண்டுவந்த கீழ்க்காணும் தீர்மானங்களும் நிறைவேறின.

"யாழ் புகையிரத நிலையத்திலிருந்து சுங்கப் பகுதிக்குச் செல்லும் புகையிரதப் பாதையில் அத்துமீறிக் குடியேறியுள்ளவர்களால் மேற்படி பாதையை புகையிரதப் பகுதியினரும், சுங்கப் பகுதியினரும், காட்டு இலாகாவினரும் பாவிக்க முடியாத நிலையில் இருக்கின்றது. இப்பாதையை கடற்கரை ஓரமாக நவாலி, வட்டுக்கோட்டை, காரைநகர் வரை இணைத்து புகையிரத சேவையை நீடிக்க வேண்டும் என்று இப்பகுதிகளிலிருந்து ஐஸ் மீன், இறால், கருவாடு முதலியவற்றை ஏற்றுமதி செய்வதற்கு வசதியளிக்கப்பட வேண்டுமென்றும், இதை 1981ல மாவட்ட அபிவிருத்திச் சபை மூலம் உடனடியாக ஆரம்பித்து துரிதமாக செயல்படுத்த வேண்டுமென்றும் போக்குவரத்து அமைச்சரையும், எதிர்க்கட்சித் தலைவரையும், யாழ்ப்பாணம், மானிப்பாய், வட்டுக்கோட்டை, ஊர்காவற்றுறை, பாராளுமன்ற உறுப்பினர்களையும் கேட்டுக்கொள்வதென இச்சபை தீர்மானிக்கின்றது.

"1956 இன் தனிச் சிங்களச் சட்டத்தின் பின் அடிக்கடி நடந்த தமிழ்ச் சிங்களக் கலவரங்களால் பாதிக்கப்பட்டு மலைநாட்டிலிருந்து மல்லிகைத்தீவு, கந்தளாய், ஆளங்குளம் பகுதிகளிலும், வடக்கே யாழ்ப்பாணம், வவனியா, மன்னார், முல்லைத்தீவுப் பகுதிகளிலும் உணவு உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் மலைநாட்டுத் தமிழ்த் தொழிலாளரது மனித சக்தியை வீணடியாது, அவரவர் வாழ்ந்து விவசாயம் செய்யும் காணியை அவரவர்க்கே சொந்தமாக்கி, அரசெடுக்கும் உணவு உற்பத்தி இயக்கத்திற்கு செயலுருவம் கொடுக்கும் வண்ணம் இச்சபை தீர்மானிக்கின்றது.

"இவ்விடயமாய் தமிழர் இயக்கத் தலைமைப் பீடமும், இவ்விலட்சக் கணக்கான மக்களது அவல நிலையைப் புள்ளி விபரப்படி எடுத்துக்காட்டிய பாராளுமன்ற உறுப்பினர்களாகிய வவனியா திரு தா. சிவசிதம்பரம், திருமலை திரு. இரா சம்பந்தர் ஆகியோரைப் பாராட்டி இதன் பிரதிகளை ஜனாதிபதிக்கும், பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், காணி விவசாய, கிராமிய அபிவிருத்தி அமைச்சர்களுக்கும் அனுப்புவதெனத் தீர்மானிக்கின்றது." (க-கு)

## மூவர் காயம்

(நெல்லியடி)

நெல்லியடிச்சந்தியில் நேற்று இருசமூகத்தவர்களுக்கிடையே இடம்பெற்ற கைகலப்பில் மூவர் பலத்த காயங்களுக்குள்ளாகி மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக பருத்தித்துறைப் பொலிசார் புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (வெ)

## ஆசிரியர்களுக்கு இந்துசமய விரிவுரை

(பச்சிலைப்பள்ளி)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் ஆசிரியர்களுக்கு இந்து சமய பாடம் கற்பித்தல் சம்பந்தமாக விரிவுரைகளை நடத்தி அதன்பின் நடைபெறும் பரீட்சையில் தேர்ச்சியடைபவர்களுக்கு சான்றிதழ்களை வழங்க உள்ளது.

ஐந்து வருடங்கள் பாடசாலைகளில் இந்து சமய பாடத்தினை கற்பித்த ஆசிரியர்களிடமிருந்தே, பாடசாலை அதிபர்களுக்கூடாக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இவ்விரிவுரைகள் வார நாட்களிலும், சனிக்கிழமைகளிலும் மாலையில் நடைபெறவிருக்கின்றன.

## 15 தொழிலாளர்கள் வேலைநீக்கம்!

[சித்தன்கேணி]

காரைநகர் சீ-நோர் நிறுவனத்தில் சுமார் பதினைந்து நிரந்தரத் தொழிலாளர்கள் அண்மையில் வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டதுமுதல் வேலைசெய்து வந்த இத்தொழிலாளர்கள் சம்பளமற்ற லீவு கூடுதலாக எடுத்ததினால் வேலைநீக்கம் செய்யப்பட்டதாகத் தெரிகிறது. இத்தொழிலாளர்கள் தமது நிலையைப்பற்றி வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு, எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ அமிர்தலிங்கம் ஆகியோரிடம் சென்றுமுறையிடப் போவதாகவும் தெரியவருகின்றது. (கு)

## வருடாந்தக் கூட்டம்

(அரியாலை)

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் வருடாந்தக் கூட்டம் எதிர்வரும் தைமாதம் 18ந் திகதி நடைபெறும்.

உதைபந்தாட்ட லீக்கில்அங்கம் வகிக்கும் 15 கழகங்களும் தனித்தனி இரண்டு பிரதிநிதிகளை வருடாந்தக் கூட்டத்திற்கு அனுப்பி வைக்கும்படி நிர்வாகச் செயலாளர் திரு ஜி ஜி. தேவதாசன் கழகங்களுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். இக்கூட்டம் தலைவர் வைத்திய கலாநிதி ஜே. பி சி. பிலிப்ஸ் தலைமையில் நடைபெறும். (கு)

## திருப்பணிவேலை மீண்டும் ஆரம்பம்

(சித்தன்கேணி)

காரைநகர் திக்கரை முருகமூர்த்தி ஆலயத்தின்திருப்பணி வேலைகள்மீண்டும் ஆரம்பமாகியுள்ளன.

போதிய நிதியில்லாமையினால் திருப்பணி வேலைகள் இடைநிறுத்திவைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (கு)

## நெல்லியடி சந்தியில் கோஷ்டிச் சண்டை இருபகுதியினருக்கும் காயம்

(உடுப்பிட்டி)

கன்பொல்லை மாதிரிக் கிராமத்தைச் சேர்ந்தவர்களுக்கும் அயல் கிராமத்தில் உள்ளவர்களுக்குமிடையில் நெல்லியடிச் சந்தியில் ஏற்பட்ட கைக்கலப்பில் இருபகுதியினருக்கும் காயங்கள் ஏற்பட்டன.

கைகலப்பின் போது கடைகளில் இருந்த போத்தல்களும் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டமையால் சம்பவம் நடந்த இடத்தில போத்தல் ஓடுகள் சிதறிக்கிடந்தன.

சுமார் அரைமணி நேரம் போக்குவரத்துகள் ஸ்தம்பிதமடைந்த நிலையில் இருந்தன. கடைகளும் மூடப்பட்டுக்கிடந்தன.

இச் சம்பவத்தைத் தொடர்ந்து பருத்தித்துறைப் பொலிசார் தீவிர நடவடிக்கைகளைத்தீவிரப்படுத்தியுள்ளனர். (அ)

## கொள்ளையர் உபயோகித்த 4சைக்கிள்களும் மீட்பு!

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தபால் நிலையப் பணம் 80 ஆயிரம் ரூபா கொள்ளையின்போது கொள்ளையர்களால் தபால் நிலையத்திலிருந்து திருடிச் செல்லப்பட்ட 4 சைக்கிள்களையும் பொலிசார் மீட்டுள்ளனர்!

சாங்கானைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. பிரேமதாசாவின் தலைமையிலான பொலிசாரின் தீவிர முயற்சியினாலேயே மேற்படி சைக்கிள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கொள்ளையடிக்கப்பட்ட பணத்துடன் நான்கு சைக்கிள்களில் ஓடிச்சென்ற கொள்ளையர்கள் ஒரு சைக்கிளின் செயின் கழன்றுவிட்டதால் அந்தச் சைக்கிளை வட்டுக்கோட்டை 'கொலிச் லேனில்' விட்டு ஓடி மறைந்துவிட்டனர் என்றும் இந்த சைக்கிளையும் பொலிசார் மீட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பொலிசார் தொடர்ந்தும் தேடுதல்வேட்டையில் ஈடுபட்டபோது சைக்கிள் ஒன்று சங்கரத்தை வீதியில் கிடப்பதைக் கண்டு மேலும் தேடுதல் நடத்தியபோது ஏனைய சைக்கிள்களையும் சங்கரத்தையிலேயே கண்டெடுத்தனர். 4 சைக்கிள்களும் சங்கானைப் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டுவரப்பட்டு அடையாளங்கள் பதிவுசெய்யப்பட்டன.


இதனைத் தொடர்ந்து சைக்கிள் சொந்தக்காரர்களுக்கு அறிவிக்கப்பட்டு அவர்களுடைய சைக்கிள்கள் அடையாளம் காட்டப்பட்டன கையடையாளங்களில் இருந்து கொள்ளையர்கள் இனம் கண்டுபிடிக்கப்படுவார்கள் என்று பொலிசார் நம்புகின்றனர்.

காங்கேசன்துறை பொலிஸ் அதிபர் அலுவலகத்தில் மேற்படி கொள்ளை சம்பந்தமாக உயர் பொலிஸ் அதிகாரிகளின் மகாநாடு ஒன்று நேற்றுமுன்தினம்காலைகூட்டப்பட்டது. (கொ)


# வொலரோன் ஈ. சீ 50%

வொலரோன் ஒரு சர்வபூச்சி நாசினி. மிளகாய், வெங்காயம் மற்றும் காய்கறிப் பயிர்களைப் பாதிக்கும் தத்துவெட்டி, வெட்டுப்புழு முதலாம் சகல தரைப் பூச்சி புழுக்களையும் ஒழித்துக்கட்டும், மிளகாய், வெங்காயப் பயிர்க் கம்பளப் புழுக்களைக் கட்டுப்படுத்துவதில் விசேஷ சக்தி வாய்ந்தது வொலரோன்.

பாவியுங்கள்
BAYER
தரமான பீடைநாசினிகள்




200 மி. லிட்டர் ரூபா 45-00


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னாரில் உரக்களஞ்சியம்

(மன்னார்)

மன்னார் மாவட்ட விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும்பொருட்டு சிறுநாவற்குளத்தில் பாரிய உரக்களஞ்சியம் ஒன்று நிறுவப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதேவேளை அடுத்தவருடம் மாவட்டத்தில் உரக்களஞ்சியங்கள் நிறுவும் திட்டத்தின் கீழ் மன்னார்மாவட்டத்தில் மேலும் 6 உரக்களஞ்சியங்களும் நிறுவப்படவுள்ளது. இவ்வுரக்களஞ்சியங்களில் தலா 80 தொன் உரவகைகளைச் சேகரித்து வைக்கமுடியும். (கு)


**ஸ்ரீதர்** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-00, 6-00 & 9 30
தமிழக முதல்வர் எம். ஜி. ஆர்-லதா
**மீனவநண்பன்**

**ராணி** - (யாழ்:நகர்)
தினசரி 10-30, பி. ப. 2-15, 6-00, இரவு 9-30
**ஒரு தலை காதல்**
(குடும்பப் பெண்ணின் கதை)

**லிடோ** (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
எம். ஜி. ஆர். - சாவித்திரி
**வேட்டைக்காரன்**

**வெலிங்டன்** (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
**நினைத்தாலே இனிக்கும்**

**வின்ஸர்** (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00, இரவு 9-30
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா-ஆனந்தன்
**தனிப்பிறவி** (புதிய பிரதி)

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
50-வது நாளை நோக்கி
தினசரி 10-30, 2-30, 6-00 & 9-30
ஜெய்சங்கர், சீமா, கே. ஆர். விஜயா
**ஒரேவானம் ஒரேபூமி**
(வண்ணக்கலர்)

**ராஜா** தினசரி 10-30, 2-15, 6-00 & 9-30
(யாழ்-நகர்)
வெற்றிகரமான 2வது மாதம்
ஜெய்கணேஷ், சுந்தரராஜன், நம்பியார், கே. ஆர். விஜயா, லதா, ஸ்ரீபிரியா, முத்துராமன்
**சுப்ரபாதம்**
(ஈஸ்ட்மன் கலர்)

**ராணி** தினசரி 10-30, 2-15, 6-00, 9-30
யாழ்ப்பாணம் 2-வது வாரம்





செயலா ஆர்ட்ஸ் அளிக்கும்
**ஒருதலை காதல்**
ஒரு குடும்பப் பெண்ணின் உணர்ச்சிப் போராட்டம்


'ஈழநாடு' ஆதரவில்

# வயாவிளான் ச. ச. நிலைய உதைபந்தாட்டப் போட்டி

## தைப்பொங்கலன்று ஆரம்பம்

(பலாலி)

வயாவிளான் ஞான வைரவர் சன சமூக நிலையம் தனது 24வது வருடாந்த விழாவை முன்னிட்டு உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியை தைப் பொங்கல் தினத்தன்று நடாத்தவிருக்கிறது. 'ஈழநாடு' ஆதரவில் நடைபெறவிருக்கும் இவ் வருடாந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் அநேக கழகங்கள் பங்குபற்றவிருக்கின்றன. வடமாகாணத்தில் உள்ள விளையாட்டுக் கழகங்கள், சன சமூக நிலையங்கள், மன்றங்களிடையே நடைபெறவிருக்கும் இச் சுற்றுப் போட்டியில் இம்முறை விரிவான பரிசுத்திட்டம் ஒன்றும் அறிமுகப்படுத்தப்படவிருக்கிறது.

இரண்டு வகைகளாக நடாத்தப்படும் இச் சுற்றுப் போட்டியின் 1ம் வகையில் 11 வீரர்களும். 2ம் வகையில் 7 வீரர்களும் அங்கம் வகிப்பர். 1ம் பிரிவுச் சுற்றுப் போட்டியே இரண்டு வகைகளாக நடத்தப்படுகின்றது. இப்போட்டியில் கலந்து கொள்ளும் வீரர்களுக்கான வயது நிறைக் கட்டுப்பாடுகள் இருக்கமாட்டாது

11வீரர்கள் போட்டியின் முதல் சுற்று ஆட்டங்கள் லீக் முறையிலும், கால் அரை இறுதிப் போட்டிகள், 7 வீரர் ஆட்டங்கள் நொக். அவுட் முறையிலும் நடாத்தப்படவிருக்கின்றன.

இறுதிப்போட்டியும் பரிசளிப்பு விழாவும் பெப்ரவரி 7ந் திகதி நடைபெறும். சாம்பியனாகத் தெரிவு செய்யப்படும் கோஷ்டிக்கு அமரர் சி கந்தவனம் ஞாபகார்த்தக் கேடயமும், வெற்றிக் கிண்ணமும் பரிசளிக்கப்படும். ஒவ்வொரு போட்டியிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் கோஷ்டிகளுக்கு வெற்றிக் கிண்ணமும், சான்றிதழ்களும் வழங்கப்படும்

சென்ற வருடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் 11வீரர் ஆட்டத்தில் சாம்பியன் இடத்தை மயிலங்காடு ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகமும், 2ம் இடத்தை ஈவினை பற்சுப்பிள்ளை விளையாட்டுக் கழகமும், 7வீரர் ஆட்டத்தின் சாம்பியன் இடத்தை கொக்குவில் சன் ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் 2ம் இடத்தை ஏழாலை ஜிம்மி கார்ட்டர் விளையாட்டுக் கழகமும் பெற்றுக்கொண்டன

இவ் வருடப்போட்டிகளுக்கு மத்தியஸ்தர் சங்க அங்கத்தவர்களே மத்தியஸ்தர்களாக கடமையாற்றுவர்.

### வெள்ளி விழா மலர்

இச் சுற்றுப்போட்டியின் பரிசளிப்பு விழாவன்று 'வெள்ளி விழா' மலர் ஒன்றும் வெளியிடப்படவிருக்கிறது. சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ளும் கழகங்களின் விபரங்களடங்கிய தொகுப்பாக இம் மலர் வெளிவரவிருக்கிறது.

நிலையமைதானத்தில் நடாத்தப்படவிருக்கும் இச் சுற்றுப் போட்டிக்கான சகல ஒழுங்குகளையும் நிலையச் செயலாளர் திரு எம். ஜெகநாதன் செய்து வருகிறார் பங்குபற்ற விரும்பும் கழகங்கள், நிலையங்கள் தமது விண்ணப்பங்களை இம் மாதம் 27ம் திகதிக்கு முன் நிலையச் செயலாளர், ஞான வைரவர் சன சமூக நிலையம், வயாவிளான் என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கும்படி கேட்கப்பட்டுள்ளார்கள், (ஈ)

## சீ - நோர் சாம்பியன்

(யாழ்ப்பாணம்)

யாழ். அரசாங்க நலன்புரிச் சங்கத்தினரால் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடத்தப்பட்ட ஏழுபேர் கொண்ட நொக்கவுட் உதைபந்தாட்டப் போட்டியில் குருநகர் சீ-நோ வலைத்தொழிற்சாலை சாம்பியனாக வெற்றியீட்டியது

இறுதியாட்டத்தில் குருநகர் வலைத்தொழிற்சாலை யாழ் மாநகர சபையை 2-1 என்ற கோல்களால் வெற்றியீட்டி சாம்பியனாகத் தெரிவானது (க)

## இன்றைய பலன்

மார்கழி மாதம் 8ம் திகதி
(செவ்வாய்க்கிழமை)
(23-12-80)

மேடம்: பொருளாதார நிலை சீரடையும். சிலர் வாழ்க்கையில் எதிர்பாராத வரவுகளும் கும் இடமுண்டு பத்திரிகையாளராயின் வேதனம் உயர்த்தப்படலாம்.

இடபம்: தொழில்துறையில் அலைவுகள் ஏற்படும், தானிய நட்டத்திற்கு இடமுண்டு. வியாபாரிகள் புதிய முதலீடுகளைத் தவிர்த்துக்கொள்ளவும் பொறுமை நன்று.

மிதுனம்- இனந் தெரியாத வேதனையால் தாக்கப்படுவீர்கள். வாழ்க்கையில் நிம்மதியற்ற நிலை உருவாகும். விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை நன்று.

கடகம்: நிதியில் அபிவிருத்தி தென்படும். எதிர்பாராத வரவுகளும் ஏற்படக்கூடும், தொழிலில் வெற்றிக்கு இடமுண்டு.

சிங்கம்: அறவழியில் நாட்டம் பிறக்கும். செய்தொழிலால் நஷ்டம்ஏற்படும். மனதிடம் வேண்டும். சகோதர கவலையுமுண்டு.

கன்னி: வாகன சாரதிகள் பயனடைவர். ஆசிரியர்களின் அவர்கள் பணி சிறப்புறும் தோட்டத்தொழிலாளர் மகிழ்ச்சியடைவர்.

துலாம்: பொதுவாக வாழ்க்கையில் நிம்மதி கிடைக்கும். ... மகிழ்ச்சியடைவர். தொழிலில் வெற்றியுண்டு. சுபதினம்

விருட்சிகம்: ஏமாற்றலின் தாக்குதலால் அவதிப்படுவீர்கள், சிறு பிணிக்கும் இடமுண்டு, குடும்பத்திலும் உபத்திரவங்கள் தலை தூக்கும். திருப்தியற்றநிலை.

தனு: வாழ்க்கை ஒன்று மகிழ்ச்சிநிறைந்ததாக விருக்கும், களஸ்திர வழியாலும் நன்மைகள் வந்து சேரும். பெற்றோர் ஆதரவும் உண்டு.

மகரம்: சூழ்ச்சி வலை பின்னும், அடுத்துக்கெடுப்பவர்கள் அருகிலேயே இருப்பர். சகோதர வழியால் சஞ்சலமான சம்பவங்கள் இடம்பெறும் கடன்பட நேரிடலாம். மனஅடக்கம் வேண்டும்.

கும்பம்: இறை வழிபாடு மேலிடும், இதயத்தில் அமைதியும் ஏற்படும். பிதா வழிமூலம் நல செய்தியும் கிடைப்பதற்கு இடமுண்டு. முதியவர் ஒருவர் உங்களுக்கு தக்கசமயத்தில் ஆதரவு தருவார்.

மீனம்: கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும். எதையும் சிறப்புடன் செய்வதற்கு விரும்புவீர்கள், ஓவியர்கள்வாழ்க்கை வளிமையாகும். சிலருக்கு இடமாற்றமும் ஏற்படலாம். இளைஞர்களுக்கு நல்லதினம்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## பிரதமரிடம் எடுத்துக் கூறுவர்

(அரியாலை)

வடபகுதிக்கு உத்தியோகபூர்வமாக விஜயஞ் செய்யவிருக்கும் பிரதமர் திரு ஆர். பிரேமதாசாவை நேரில் பேட்டிகண்டு இலங்கை வாழ் வள்ளுவ மக்களின் கல்வி, பொருளாதாரம், வேலைவாய்ப்பு என்பவற்றில் உள்ள குறைபாடுகள் குறித்த கருத்தொன்றை நேரில் ... ளிக்க அகில இலங்கைத் திருவள்ளுவர் மகாசபை ஏற்பாடு செய்துவருகிறது. (கு)

## ரூபா 90 000

(உடுப்பிட்டி)

நெல்லியடிப் பட்டினசபை மத்திய சந்தையிலுள்ள மரக்கறிச் சந்தை அடுத்த வருடம் 90 000 ரூபாவுக்குக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

கடந்த வருடம் மரக்கறிச் சந்தை 43,000 ரூபாவுக்கே குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. (கு)


**வெஸ்லி** (மானிப்பாய்)
தினசரி 6-15, 9-30,
சனி-ஞாயிறு 2-30
**வாடைக்காற்று**

**நாகபூஷணி** (...)
தினசரி 6-15, 9-30
சனி-ஞாயிறு 2-15
ஜெமினி சரோஜாதேவி
**ஆடிப் பெருக்கு**

**ஹரன்** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
நாகேஸ்வரராவ்-சாவித்திரி
**தேவதாஸ்**

A GRAND X'MAS RELEASE!
**SANTHI** (JAFFNA) 10-30, 2-30, 4-45, 7-00 and 9-30
How Deep Is Your Love, Night Fever Staying Alive, More than Woman, Perfomed By The Bee Gees
JOHN TRAVOLTA ★ KAREN CORNEY
IN
**SATURDAY NIGHT FEVER**
A FAMILY ENTERTAINMENT
DANCE - MUSIC - SUSPENSE - THRILL - color
வர்ணஜாலம் புரியும் மின் ஒளியில் அமெரிக்க சமல் ... JOHN TRAVOLTA வும் குழுவும் ... பொப் இசை நடனம், பொப் ...
அரிய வாய்ப்பு!!


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

டில்கா
ரேடியோ அன் ரீ.வி.
டெக்னிஷியன்ஸ்
பஸ்நிலையம்
எதிர்மேல்மாடி
உங்கள்
ரேடியோக்கள்
டேப்றெக்கோடர்கள்
மின்சார உபகரணங்கள்
தொலைக்காட்சிப் பெட்டிகள்
எதுவாகிலும்
உடன் சீரமைத்துக் கொள்ள,
202, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஈழநாடு
The Eelanaadu
60 சதம்

UNIVERSITY OF SRI LANKA JAFFNA CAMPUS
RECEIVED
PERIODICALS DIVISION
LIBRARY

## மானிப்பாய் வாடகைச்சபை

(பண்டத்தரிப்பு)
மானிப்பாய் பிரதேச வாடகைச்சபை இயக்குநர்களாக திரு. பி. பவளகாந்தன், திரு. சே. கயிலாசபிள்ளை, திரு. எஸ். தியாகராசா, திரு. எஸ். எம். செல்வத்துரை ஆகியோரை வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு நியமித்துள்ளது. (க)

## எதிர்க்கட்சி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
நிராகரிப்பார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

இப் பிரேரணை தொடர்பாக ஏற்கனவே எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், திரு. மைத்திரிபாலா சேனநாயக்கா ஆகியோர் பாராளுமன்றசெயலாளர்நாயகத்திற்கு 34-ம் பிரிவின்படி நம்பிக்கையில்லாப் பிரேரணையை 23-ம் திகதி எடுக்கவேண்டாமென்றும், பிறிதொரு தினத்துக்கு ஒத்திப்போடுமாறும் கேட்டிருக்கிறார்கள்.

34-ம் பிரிவானது ஒரு தினப் பணிப்புக்கு பொறுப்பாயுள்ள ஓர் உறுப்பினர், பிறிதொர் தினத்துக்கு அத்தினப் பணிப்பை பின்போடவேண்டுமென்ற தமது விருப்பத்தை முன்கூட்டியே செயலாளர்நாயகத்திற்கு தெரிவித்தாலன்றி எந்த ஒரு உறுப்பினரும் தினப்பணிப்பை பிரேரிக்கலாம் என்று கூறுகிறது. (ம-இ)

## பயிற்சி

ரேடியோ - டெலிவிஷன், எயார்கொண்டிசனிங் - மூன்று மாத டிப்பிளோமா பயிற்சி ஆரம்பம். 27-12-80. சனி, ஞாயிறு வகுப்புக்கள். அனைவரும் சேரலாம். நாஷனல் அக்கடமி, மொம்சாக் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 7730

### யாழ். ஆஸ்பத்திரியில்

# 81 நாட்களில் 702 பேர் கருத்தடைச் சிகிச்சை!

(யாழ்ப்பாணம்)
குடும்பக் கட்டுப்பாடு கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொள்பவர்களுக்கு 500 ரூபா உதவிப் பணம் வழங்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்ததைத் தொடர்ந்து கடந்த அக்டோபர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் டிசெம்பர் மாதம் 20-ம் திகதி வரையிலான காலப் பகுதியில் யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையில் 702 பேர் அறுவைச் சிகிச்சை பெற்று அதற்கான உதவிப் பணத்தைப் பெற்றுக்கொண்டார்கள்.

இவர்களில் 556 பேர் பெண்களாகும்.

இந்த 500 ரூபா உதவிப் பணத்தைக் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்துகொண்டவர்கள் யாழ் அரசினர் வைத்தியசாலையில் வழங்கப்படும் உத்தியோகபூர்வமான பத்திரத்தைப் பெற்றுச் சென்று யாழ். அரசாங்க செயலகத்திலுள்ள திட்டமிடல் பிரிவில் சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளவேண்டும். இதனால் அறுவைச் சிகிச்சை செய்துகொண்டவர்கள் குறிப்பாக பெண்கள் பெரும் சிரமம் அனுபவித்து வருவதாக பலத்த புகார் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். அரசாங்க செயலகத்தில் இந்த 500 ரூபா உதவிப் பணம் செவ்வாய், வியாழன் ஆகிய நாட்களிலேயே வழங்கப்படுகிறது அத்துடன் நீண்ட நேரம் பல பகுதிகளுக்கும் சென்று அதிகாரிகளின் உத்தியோக ரீதியான கையொப்பங்களைப்பெற்ற பின்பே இப் பணத்தை பெற்றுக்கொள்ள முடிகிறது. அறுவைச் சிகிச்சை செய்தபின்பு ஓய்வாக தகுந்த பராமரிப்பில் இருக்கவேண்டிய பெண்கள் யாழ் அரசாங்க செயலகத்தின் படிகளில் பல தடவை ஏறி இறங்கிப்போய் வரவேண்டியிருப்பதாகக் கருத்தடைச் சிகிச்சைபெற்ற பெண் ஒருவர் தெரிவித்தார்.

மேற்படி உதவிப் பணத்தை யாழ் அரசினர் வைத்தியசாலையில் வைத்து அறுவைச் சிகிச்சை முடிந்து வெளியேறும் போதே இவர்களுக்குக் கையளிப்பதன் மூலம் இக்கஷ்டத்தைப் போக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. இதனால் கருத்தடையை மேலும் ஊக்கப்படுத்தப்படும் அரசின் திட்டம் வலுப்படுத்தப்படும் என்று நம்பப்படுகிறது. (பண்-அ

## பாரதியை...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)
மூழ்கி விடுவதையும் பின்னர் பார்க்கலாம். இது பாரதியின் தோல்வி அல்ல பாரதியின் கருத்துக்களை ஜீரணிக்க மறுத்த மக்களின் செயலால் விளைந்த ஆன்மீகத் தோல்வி எனறே கூறவேண்டும். ஆனால் பாரதி மேன்மைகொள் சைவநீதி—தொன்மைமிகு தமிழிலக்கிய நெறி— பெருமை மிகு காந்தீய வழி எனும் மூன்றிலும் ஈர்க்கப்பட்டு நின்றமையால் ஆன்மீக உலகு எனும் வட்டத்துள் நின்றே தனது சமுதாயப் புரட்சிக்கான அழைப்பைவிடுத்தான்.
(தொடரும்)

## மரண அறிவித்தல்

### விசுவநாதர் வைரமுத்து

(மலாயன் பென்ஷனியர்)

வண்ணார்பண்ணை மேற்கு, 848, மானிப்பாய் வீதியைச் சேர்ந்த மலாயன் பென்ஷனியர் விசுவநாதர் வைரமுத்து காலமானார். இவர் தியாகராஜா, சண்முகராஜா [மத்தியகிழக்கு], சரஸ்வதி, பத்மாவதி, புஷ்பவதி ஆகியோரின் தந்தையும், இளைப்பாறிய தபாலதிபர் சி ஈஸ்வரபாதம், ச. கி அம்பலவாணர் (உதவிப் பொது முகாமையாளர் 'ஈழநாடு'), அ மாணிக்கம் (கணக்காளர்), டாக்டர் எஸ். ராஜரத்தினம் ஆகியோரின் மாமனாரும், பாரதி (கொழும்பு பல்கலைக்கழகம்), தனலட்சுமி, சரவணபவன், சிறிதரன், கிருபாகரன், சந்திரிகா, வசந்தமாலா, ஷீலா ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் தகனக்கிரியைகள் இன்று பிற்பகல் 4 மணிக்கு சோம்பயன்மணல் மயானத்தில் நடைபெறும். 7732

### அவசரகாலச்சட்ட காலத்தில் இடம்பெற்றவை பற்றிய

# விசாரணைக்குழு அறிக்கையை உடன் வெளியிட வேண்டும்"

## மனித உரிமைகள் தினக்கூட்டத்தில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)
கடந்த வருட யாழ். மாவட்டத்தில் அவசரகாலச் சட்டம் அமுலிலிருந்தபோது இடம்பெற்ற சம்பவங்கள் குறித்த விசாரணைக்குழுவின் அறிக்கையை உடனடியாக வெளியிடவேண்டுமென்று கோரும் தீர்மானம் இனங்களுக்கிடையிலான நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ். றிம்மர் மண்டபத்தில் நடைபெற்ற மனித உரிமைகள் தினக்கூட்டத்திலேயே இத்தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. அங்கு நிறைவேற்றப்பட்ட ஏனைய சில தீர்மானங்கள் வருமாறு:-

- அவசர காலச்சட்டம் அமுலிலிருந்தபோது உயிரிழந்தவர்கள், காணமற்போனவர்கள், இம்சிக்கப்பட்டவர்கள் ஆகிய இளைஞர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும்.
- வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டதால் வேலைநீக்கம் செய்யப்பட்டவர்களுக்கு உடனடியாக வேலைவழங்கவேண்டும்.
- வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வந்துகுடியேறியுள்ள மலையகத்தமிழர்களை அவர்கள் குடியேறி விவசாயம் செய்யும் காணிகளிலிருந்து வெளியேற்ற அரசு எடுக்கும் முயற்சிகளைக் கைவிடுவதுடன் அவர்களுக்கே அவை சொந்தமாக்கப்படல் வேண்டும்.

இக்கூட்டத்தில் 'அவசர காலம் 79' நூல் பற்றி பேராசிரியர் கா. சிவத்தம்பி விமர்சன உரையாற்றினார். நூலின் பிரதிகளை டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம், சட்டத்தரணி இ. பாலசுப்பிரமணியம், திரு. எம் சி. சுப்பிரமணியம், வண. சாம். அல்பிரட் ஆகியோர் பெற்றுககொண்டனர். (கு)

## புனரமைப்பு

(மன்னார்)
எருக்கலம்பிட்டி பிரதான வீதி சுமார் 35 ஆயிரம் ரூபா செலவில் புனரமைப்புசெய்யப் பட்டுவருகிறது.

## காசி

(1ம் பக்கத் தொடர்ச்சி)
தாஸ். சாந்தகுமார், காந்தரூபன், மரியகுசை, பூபாலபிள்ளை உட்பட 8 இளைஞர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகளின் சார்பில் சட்டத்தரணி எம். சிவசிதம்பரம் ஆஜரானார். விசாரணையின் பின்னர் எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர். (ம)

## கூட்டணி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
சட்டத்தரணி திரு. இ. பாலசுப்பிரமணியம் அல்லது யாழ். எம் பி. திரு. வெ யோகேஸ்வரன் இல்லத்தில் இம்மாதம் 28ம் திகதி மாலை இடம்பெறும் என்றும் கூட்டணி சார்பில் கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கமும், கூட்டணித்தலைவர் திரு. எம். சிவசிதம்பரமும் கலந்துகொள்வார்கள் என்றும் கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன. இக் கூட்டத்தில் பல முக்கிய பிரச்னைகள் குறித்து விவாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

## மரண அறிவித்தல்

### வைரமுத்து வைத்தியலிங்கம்

கந்தர்மடம், உடையார் ஒழுங்கையைச் சேர்ந்த வைரமுத்து வைத்தியலிங்கம் காலமானார். இவர் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களின் பெருமகனும் சொர்ணம்மாவின் அன்புக் கணவரும், கருணாகரி, கருணாகரன், கருணாநிதி அவர்களுடைய அன்புத் தந்தையாரும், சுவாமிநாதனின் அன்பு மாமனாரும், சிவகாமசுந்தரி அவர்களின் அன்புச் சகோதரரும், ஏ. ஆர். சுப்பிரமணியம் (இளைப்பாறிய ஆசிரியர்), ஏ ஆர். சண்முகலிங்கம் (C. G. R. அனுராதபுரம்), ஏ. ஆர். நடராசா (யாழ்ப்பாணக் கல்லூரி), மாசிலாமணி, சிவஞானம்மா தாமோதரம்பிள்ளை, குணபூசணி குலராசரன் ஆகியோரின் மைத்துனரும், ஷர்மிளா, ஆர்த்தி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் தகனக்கிரியை இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணியளவில் கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெறும். 7731

றைக்கோடிங் செய்வதற்கு நன்கு அனுபவம் வாய்ந்தவர்கள் தேவைப்படுகிறார்கள். இம்மாதம் 31 ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும். விண்ணப்பிக்கவேண்டிய முகவரி:

மனேஜர்
37, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 7517, 7403
7718

யாழ். சட்டக் கல்வி நிலையம்
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

| | | |
|---|---|---|
| சட்ட முதற் தேர்வு | — | 1981 |
| சட்ட இறுதித்தேர்வு | — | 1981/82 |
| புதிய விரிவுரைகள் ஆரம்பம் | — | 4-1-81 |
| விண்ணப்ப முடிவுத் திகதி | — | 31-12-80 |

மீட்டல் வகுப்புகளும் உண்டு.
விபரங்களுக்குத் தொடர்புகொள்க.
பதிவாளர். (7725)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63- இலக்க அச்சகத்தில் டிசம்பர் 23-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News paper at General PostOffice Sri Lanka. under No: GB 8948/78. The Eelanaadu. P. B. No: 49, TeleGrams: Eelanaadu, Phone: 389.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org